விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

23 NOV 2009

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 07 திங்கட்கிழமை (23.11.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 339





## கிரிபத்கொடையில் நேற்று ஜே.வி.பி. மீது தாக்குதல்

(கொழும்பு)

கிரிபத்கொட்டையில் நேற்று காலை இடம் பெற்ற ஜே.வி.பியின் கூட்டமொன்றின் போது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அமைச்சர் மேர்வின் சில்வாவின் ஆதரவாளர்கள் சிலரே இந்தத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

தாக்குதல் காரணமாக முதலில் கூட்டம் இடை நிறுத்தப்பட்டது. இதையடுத்து கூட்டத்தை மீண்டும் (14ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் ரணில் போட்டியிடக்கூடிய சாத்தியம்?



(கொழும்பு)

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சிகளின் விரிவான கூட்டணியான ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரம சிங்க போட்டியிடக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராக ஜெனரல் சரத் பொன்சேகா போட்டியிடக் கூடும் என்ற செய்திகள் பொய்ப்பிக்கப்படக் கூடுமென ஆங்கில வார இதழ் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் ரணில் விக்கிரம சிங்கவின் எதிர்கால சவால்கள் என்ற நூல் வெளியீடு உண்மையில் ஜனாதிபதித்தேர்தல் விஞ்ஞாபனமாகவே கருதப்பட வேண்டும் என்று (14ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண பேச்சை முன்னெடுக்க இணக்கம்

## சூரிச் மாநாட்டில் ஏற்பாடு

(சூரிச்)

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது என சூரிச்சில் நடைபெற்ற மாநாட்டில் இணக்கம் காணப்பட்டுள்ளது. அத்துடன் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

## முகாம் மக்களை விடுவிப்பதாக அறிவிப்பு ராஜபக்ஷ அரசியல் சித்து விளையாட்டு

### எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

(வவுனியா)

வன்னி தடுப்பு முகாம்களில் இருந்து தமிழ் மக்கள் அனைவரையும் டிசம்பர் முதலாம் திகதி விடுவிப்பதாக இலங்கை அரசு அறிவித்திருப்பது அரசியல் சித்து விளையாட்டு என எதிர்க் கட்சிகள் கண்டித்துள்ளன.

இலங்கையில் நடந்த போரினால் இடம் பெயர்ந்த மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் வன்னியில் அரசு அமைத்த தடுப்பு முகாம்களில் (14ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகளின் முக்கியஸ்தர்கள் பொன்சேகாவுடன் இரகசிய பேச்சு

(கொழும்பு)

ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் எதிர்க்கட்சிகள் இரகசிய சந்திப்பு ஒன்றை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, படைகளின் பிரதம அதிகாரியாக இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் எதிர்க்கட்சிகள் கடந்த வியாழக்கிழமை இரவு இரகசிய சந்திப் பொன்றை மேற்கொண்டுள்ளன.

இந்தச் சந்திப்பில் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கியதேசியக் கட்சியின் பொதுச் (14ஆம் பக்கம் பார்க்க)

## 14 மில்லியன்கள் வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி

(கொழும்பு)

இலங்கையில் வாக்களிக்க தகுதியானவர்களின் எண்ணிக்கை 14 மில்லியன் எனவும் 2005ஆம் ஆண்டைவிட ஒரு மில்லியன் அதிகமானதெனவும் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது, வாக்காளர் எண்ணிக்கை 14 மில்லியன்களை விட அதிகம். இது கடந்த தேர்தலை விட ஒரு மில்லியன் அதிகம். தற்போது 140 இலட்சத்து 88 ஆயிரத்து 500 பேர் வாக்களிக்க தகுதி (14ஆம் பக்கம் பார்க்க)



சிறிகாந்தா

## அரசின் பக்கம் தாவமாட்டோம்; சிறிகாந்தா, கிசோர் அறிவிப்பு!

(கொழும்பு)

நாம் அரசின் பக்கம் செல்லப் போகின் றோம் என்றுக் கூறுவது தவறானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.சிறிகாந்தா மற்றும் சிவநாதன் கிசோர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாம் அரசின் பக்கம் தாவப்போகிறோம் என வெளியான அறிக்கையில் உண்மையில்லை.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நாம் எமது சேவையினை வழங்குவோம். இடம்பெயர்ந்த (14ஆம் பக்கம் பார்க்க)



கிசோர்

## அவுஸ்.கிறிஸ்மஸ் தீவில் இலங்கையர் மோதல்

(பேர்த்)

அவுஸ்திரேலிய கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 150 இலங்கை அகதிகளுக்கும் ஆப்கானிஸ்தானிய அகதி களுக்குமிடையில் மோதல் இடம் பெற்றுள்ளது.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் களினால் காயமடைந்த மூவர் உடனடியாக பேர்த்திலுள்ள வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இலங்கை (14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் எப்போ நடக்கும்? நாளை உத்தியோக பூர்வ அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவித்தல் நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை வெளியாகும் என மத்திய அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, ஜோன் செனவிரத்ன மற்றும் விநாயகமூர்த்தி முரளீதரன் ஆகியோர் மட்டக்களப்பில் அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஏற்பாடுகளை ஆராயும் பொருட்டு மட்டக்களப்பு மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரமுகர்கள் மற்றும் அதன் ஆதரவு கட்சி பிரதிநிதிகள் கலந்து (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கான பாடநூல்கள் அனைத்தும் வந்துசேர்ந்தன

### வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு 2010ஆம் கல்வியாண்டில் வழங்குவதற்கான இல்வசப்பாடநூல்கள் முழுமையாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தகவல் தருகையில், 2010ஆம் கல்வியாண்டில் யாழ்மாவட்ட பாடசாலை (14ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முகாம் மக்களுக்கு நடமாடும் சுதந்திரம் ஐ.நா.சபை செயலாளர் வரவேற்பு

(கொழும்பு)

இடம் பெயர் மக்கள் சுதந்திரமாக இடம் நகர்வதற்கு வழங்கப்படவுள்ள அனுமதி பாராட்டுக்குரியதென ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

உள்ளக இடம் பெயர்வுக்கு ஆளான மக்கள் சுதந்திரமாக இடம் நகர முடியுனெ இலங்கை அரசாங்கம் விடுத்துள்ள அறிவிப்பு வரவேற்கத் தக்கதென ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இடம் பெயர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களில் அரைவாசிப் பேர் விடுதலைசெய்யப்பட்டுள்ளமை வரவேற்கத்தக் கது.

மீள் குடியேற்ற நடவடிக்கைகளை காத்திரமான முறையில் முன்னெடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட மனிதாபிமான அமைப்புகளுடன் இணைந்து செயற்பட வேண்டுமென பான் கீ மூன் கூறியுள்ளார்.

**பிரிட்டிஷும் பாராட்டு**

இதேவேளை இடம் பெயர் மக்களின் சுதந்திர இடம் நகர்வு குறித்த தீர்மானம் பாராட்டுக்குரியது என பிரித்தானிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

வவுனியா இடம் பெயர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் சுதந்திரமாக இடம் நகர முடியும் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளமை திருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளதென பிரித்தானிய சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் மைக் பொஸ்டர் தெரிவித்துள்ளார்.

எதிர் வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் வவுனியா இடம் பெயர் முகாம் மக்கள் சுதந்திரமாக இடம் நகர முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இடம்பெயர் முகாம் மக்கள் பாரிய நன்மைகளை அடைவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. யதார்த்தமான இடம் நகரும் சுதந்திரம் மூலம் மக்கள் எங்கு செல்ல வேண்டுமென தாங்களாகவே தீர்மானிப்பார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீள் குடியேற்றப்பட்ட கிராமங்களில் நிவாரணங்களை வழங்குவதற்கு சர்வதேச நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நிலக்கண்ணிவெடிகளை அகற்றி மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகளுக்கு பிரித்தானிய அரசாங்கம் பூரண ஆதவுது அளிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடம் பெயர் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு மேலதிக நிதியுதவிகளை வழங்க முடியும் என உறுதியளித்துள்ளார். (ச-5)

# விவசாய உபகரணங்கள் அனுப்பி வைப்பு

வடக்கின் விவசாய நடவடிக்கைகளுக்காக 50மில்லியன் ரூபாய் பெறுமதியான விவசாய உபகரணங்கள் கொழும்பிலிருந்து வடக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பசில் ராஜ பக்ஷவினால் வடக்கின் வசந்தம் திட்டத்திற்கு இதற்கான நிதியுதவி பெறப்பட்டது.

இவ் உபகரணங்கள் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் மீள் குடியமர்ந்தவர்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளது. (ஏ-6)

# லொறி விபத்து இருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு வாழைச்சேனையிலிருந்து உர மூடைகளை ஏற்றிச்சென்ற லொறியொன்று பாதையை விட்டு விலகி விபத்திற்குள்ளானதில் இரண்டு விவசாயிகள் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் ஊற்றுச் சேனையைச் சேர்ந்த வீ.வடிவேல் (வயது 50) மற்றும் சி.சின்னராசா (வயது 50) ஆகியோரே உயிரிழந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள அதே வேளை 15 பேர் காயமடைந்த நிலையில் பொலன்னறுவை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ச-5)

# பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஜமெய்க்காவிற்கு நேற்று விஜயம்

(கொழும்பு)

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்றையதினம் கரீபியன் தீவுகள் நாடான ஜமெய்க்காவிற்கு விஜயம் செய்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளது தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்ளும் நோக்கில் அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகளது தலைவர்களின் மாநாடு இம்முறை 21 ஆவது தடவையாக நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலகப் பொருளாதாரம், காலநிலை மாற்றம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க எதிர்வரும் 27 ஆம் திகதி விசேட உரையாற்றவுள்ளார்.

எதிர்வரும் 27ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரையில் ட்ரினிடாட்டில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுடன், வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவும் இணைந்து கொள்ள இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)



யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்திற்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் சங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற உதை பந்தாட்டப் போட்டி 3:3 என்ற கோல் கணக்கில் சமநிலை பெற்றது. இப் போட்டியில் கலந்து கொண்ட இரு அணி வீரர்களையும் படங்களில் காணலாம்.

படங்கள்: சுரேஸ்

# அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகத்தை மூட அரசுதீர்மானம்

(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகத்தை மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வடக்கு கிழக்கில் போர் இடம்பெற்ற போது அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகம் உருவாக்கப்பட்டது. இந்த அலுவலகத்தின் ஊடாக யுத்தப் பிரதேசத்தில் இருந்து மக்களுக்கான நிவாரண உதவிகள் அனுப்பி வைக்கப்பட்டன.

அத்துடன் யாழ்ப்பாணத்திற்கான சகல பொருட்களும் இதனூடாகவே அனுப்பிவைக்கப்பட்டது. தற்போது யுத்தம் நிறைபெற்று ஏ-9 பாதையூடாக போக்குவரத்து ஓரளவு சீர் அடைந்துள்ள நிலையில் அவ் அலுவலகத்தை மூடுவதற்கு அவ் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது குறித்து யாழ். அரச அதிபர் க.கணேஷுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# பூநகரி கல்விக் கோட்ட பாடசாலைகள் ஆரம்பம்

## கடமைகளை பொறுப்பேற்க ஆசிரியர்களுக்கு அழைப்பு

(திருகோணமலை)

பூநகரி கல்வி கோட்டத்திற்கு உட்பட்ட 4 பாடசாலைகள் இன்று ஆரம்பமாகின்றது என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பூநகரி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட முழுங்காவில் மகா வித்தியாலயம், ஜெயபுரம் மகா வித்தியாலயம், நாச்சிக்குடா ஜி.எம்.எம்.வி, இதனமாநகர் ஜி.ரி.எம்.எஸ் ஆகிய நான்கு பாடசாலைகள் இன்று ஆரம்பமாகின்றன.

எனவே குறித்த பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் இன்று தமது கடமையைக் பொறுப்பேற்க வேண்டும்.

அத்துடன் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம் முழங்காவில் மகா வித்தியாலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த உதவிக்கல்விப் பணிப்பாளர், சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்கள் உட்பட கல்வி சார் உத்தியோகத்தர்கள் மற்றும் கல்வி சார ஊழியர் தமது கடமைகளை உடனடியாக பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

தற்போது முழங்காவில் மகா வித்தியாலயத்தில் இயங்கும் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராசா இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா குறிப்பிட்டார். (ச-5)

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வடக்கு அமைப்பாளர் கருணா

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வட பிராந்திய அமைப்பாளர் பதவியை அமைச்சர் முரளிதரனுக்கு வழங்க ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ தீர்மானித்துள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான பிரதான தளபதியாக செயற்பட்டுவந்த அவர், அந்த அமைப்பில் இருந்து விலகிய பின்னர், தனியான கட்சியொன்றை ஆரம்பித்ததுடன், கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானுடன் ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டார்.

அந்த கட்சியின் பிரதித் தலைவரான அவருக்கு மகிந்த ராஜபக்ஷ அமைச்சர் பதவியை வழங்கியிருக்கிறார்.

இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்ட நிலையில், ஜனாதிபதி அவரை வட மாகாணத்தில் அமைப்பாளராக நியமிக்கத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


# அரசாங்க அறிவித்தல்

## மணல் விநியோக அனுமதிப்பத்திரங்கள் வழங்கல்

**யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்பட்டுவரும் மணல் அனுமதிப்பத்திரங்களை பெறும் நடைமுறை 2009.11.23 ஆந் திகதியில் இருந்து பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது என்பதை பயனாளிகள் யாவருக்கும் அறியத் தரப்படுகின்றது.**

- ➡ கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோரினால் சிபார்சு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை வழமைபோல பயனாளிகள் மாவட்ட செயலக வளாகத்தினுள் அமைந்துள்ள மணல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் கிளையில் சமர்ப்பித்து அனுமதிக்கப்படும் மணலின் அளவின் பிரகாரம் பணம் செலுத்துதல் வேண்டும். ஒரு உழவு இயந்திரச் சுமை மணலுக்காக செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா ஆயிரத்து இருநூற்று ஐம்பது (1250) ஆகும்.
- ➡ மணல் அனுமதிப்பத்திரம் வழங்கும் கிளையினர் பயனாளிகளிடம் இருந்து பணத்தைப் பெற்று அதற்குரிய பற்றுச் சீட்டையும் அனுமதிப்பத்திரம் வழங்கல் தொடர்பான ஆவணத்தையும் பூர்த்தி செய்து பயனாளிகளிடம் ஒப்படைப்பார்கள்.
- ➡ புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகத்தின் யாழ்ப்பாணப் பிரதேச அலுவலகம் யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கட்டடத்தில் தற்பொழுது இயங்கிவருகின்றது. பயனாளிகள் தம்மிடம் கையளிக்கப்பட்ட ஆவணங்களை புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் யாழ்ப்பாண அலுவலகத்தில் கையளிப்பதுடன் பயனாளிகள் தாம் பெறும் ஒவ்வொரு உழவு இயந்திரச் சுமை மணலுக்கும் அரசிறையாக ரூபா 58.80 உம் அனுமதிப் பத்திரக் கட்ட ணமாக ஒரு அனுமதிக் பத்திரத்திற்கு ரூபா 109.80 உம் செலுத்துதல் வேண்டும். புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் அலுவலகத்தினர் மணல் பெறுவதற்கான அனுமதிப்பத்திரங்களை பயனாளிகளுக்கு வழங்குவார்கள்.

**க.கணேஷ்**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(C-3762)


# வன்னி மாவட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு 2010இல் இடமாற்றம்

(திருகோணமலை)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கான வருடாந்த இடமாற்றம் அடுத்த ஆண்டு இரண்டாம் தவணை ஆரம்பத்திலேயே வழங்கப்படுமென வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் அறிவித்துள்ளதாவது,

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்கள் வருடாந்த இடமாற்றம் வழங்கலுக்காக விண்ணப்பித்துள்ளனர்.

இவ் விண்ணப்பங்கள் சாதகமாக பரிசீலிக்கப்பட்டு 2010 ஆம் கல்வி ஆண்டின் முதலாம் தவணை முடிபடைந்த பின்னரே இடமாற்றம் வழங்கப்படும்.

எனினும் இவ்வாறு வருடாந்த இடமாற்றம் வழங்குவதாயின் குறித்த ஆசிரியர் கடமையாற்றிய தமது பாடசாலை உரிய இடத்தில் இயங்குமாயின் அங்கு பணியைப் பொறுப்பேற்க வேண்டும்.

மாறாக கடமையாற்றிய பாடசாலையில் பணியைப் பொறுப்பேற்க பின்னடிக்கும் ஆசிரியர்களின் இடமாற்ற விண்ணப்பங்கள் சாதகமாக பரிசீலிக்கப்படமாட்டாது என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா குறிப்பிட்டுள்ளார். (ச-5)


# தேவை

**யாழ். நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு கணனி வடிவமைப்பாளர் ஒருவரும் ஸ்கிறீன் பிறிண்டிங் சுயமாக செய்யக்கூடிய ஒருவரும் தேவை.**

**தொடர்பு:-0773706506**

(C-3761)

## சென்னைப் பல்கலைக்கழகத்தில்

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இலவச கல்வி வழங்க ஏற்பாடு

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இலவச கல்வி அளிக்க சென்னைப் பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

சென்னை பல்கலைக்கழகத்தில் நடை பெற்ற சிண்டிகேட் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பாக நேற்று துணைவேந் தர் ஜி.திருவாசகம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.அப்போது அவர் கூறியதாவது,

இந்தியாவில் வாழும் குறிப்பாக தமிழ் நாட் டில் வாழும் இலங்கை தமிழர்களில் கல்லூரி படிப்புக்கு தகுதி பெற்ற அனைவருக்கும் இலவசக் கல்வி அளிக்க சென்னை பல் கலைக்கழகம் ஏற்பாடு செய்துள்ளது. அவர் கள் தொலை தூரக்கல்வி கல்வி திட்டத்தில் இளநிலை, முதுநிலை படிப்புகளில் சேர்ந்து கொள்ளலாம். இந்த திட்டம் உடனடியாக நடை முறைப்படுத்தப்படும்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட சென்னை பல்கலைக்கழகம் மற்றும் அதற்கு உட்பட்ட கல்லூரிகளில் ஏழை மாணவர்களுக்கு இலவச கல்வி அளிக்கும் திட்டத்திலும் இலங்கை தமிழர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றார். (6)

# ஓமந்தை —பளை ரயில் பாதையை இந்திய நிறுவனம் அமைக்கும்

ஓமந்தையிலிருந்து பளை வரையான 96 கிலோமீற்றர் ரயில் பாதையை நிர்மா ணிப்பதற்கு இலங்கை புகையிரதத் திணைக் களம் இந்திய நிறுவனமொன்றுடன் ஒப்பந் தம் கைச்சாத்திடவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் சட்டத் தன்மையை ஆராய்வதற்கென ஒப்பந்தம் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள் ளதாக புகையிரதத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் பீ.பீ.விஜேசேகர குறிப்பிட் டார்.

ஒப்பந்தம் கைச்சாத்தானதும் இரண் டரை வருடங்களுக்குள் இப்பாதை நிர் மாணப் பணிகள் பூர்த்தியடையுமெனவும் அவர் கூறினார். இதேவேளை காங்கேசன் துறையிலிருந்து பளை வரையிலான புகை யிரதப் பாதையை நிர்மாணிக்க சீன நிறுவன மொன்று முன்வந்துள்ளதென பொது முகா மையாளர் குறிப்பிட்டார்.

10 கிலோ மீற்றர் நீளமான தாண்டிக் குளம் ஓமந்தை ரயில் பாதையை அமைப்பதற்கு ஏதுவாக இராணுவத்தினர் கணணி வெடி களை அகற்றியுள்ளனர். இதனைய டுத்து 7 கிலோ மீற்றர் தூரத்துக்கு புகையிரத பாதைக் கான மண் நிரப்பப்பட்டு கற்களும் பரவப்பட்டுள் ளதாக முகாமையாளர் குறிப்பிட்டார். (6)


## நினைவில் ஈரேழு ஆண்டுகள்





அமரர் கனகசபை சண்முகசுந்தரம்
(ஸ்தாபகர், சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்)
தோற்றம்:03.11.1941

அமரர் சண்முகசுந்தரம் சிவரூபன்
(மாணவன், யா/வைத்தீஸ்வராக் கல்லூரி)
தோற்றம்: 18.08.1983

மறைவு : 23.11.1995

நிழல்தந்த நீவீரிருவரை இழந்துநாம் நிற்கையில்
சுழன்று ஈரேழு ஆண்டுகள் சோகத்தில்
நிலவுலக வாழ்வே நிலையற்றதென நினைத்து
கலங்கிக் கண்ணீ ரஞ்சலி செலுத்துவோம்.

29, ஒட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(C-3760)


## முல்லைத்தீவில்

# அதிநவீன ஏவுகணை உட்பட பெருந்தொகை ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையாம் முள்ளிவாய்க்கால் மற்றும் வெள்ளாம் முள்ளிவாய்க்கால் பகுதிகளில் மேற்கொள் ளப்பட்ட தேடுதலின் போது விமானத்திலி ருந்தே இன்னொரு விமானத்தை இலக்கு வைத்துத் தாக்கக்கூடிய அதி நவீன ஏவு கணை உட்பட பெருந்தொகையான வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த இரு தினங்களாக மேற்கொள்ளப் பட்ட தேடுதலின் போதே இவைகள் மீட்கப்பட் டன. விமான எதிர்ப்பு ஏவுகணை -1 ,தன்னி யக்க டொம்போ ரக ஆயுதம் -1 , விமானத்தி லிருந்து இன்னொரு விமானத்தைத் தாக்கக் கூடிய நவீன ஏவுகணை -1 , ஆர்.பி.ஜீ.ரக துப்பாக்கி -1 , 50 கிலோ எடை கொண்ட வெடி பொருட்கள் , படகுகளுக்குப் பொருத்தும் இரு என்ஜின்கள் அதி வேக ரோரா படகுக ளுக்கான ராடர் கருவி 1,12 .5 மில்லி மீற்றர் துப்பாக்கி ரவைகள், 5854 ரீ. 56 துப்பாக் கிக்கான ரவைகள், ஆயிரத்து 500 புலிக ளின் கமிலன் ரக கைக்குண்டுகள், 18 ஒலி பரப்புக் கருவிகள், யுத்த டாங்கிகளில் பயன் படுத்தப்படும் 23 மில்லி மீற்றர் கொண்ட ரவைகள், 150 புலிகளால் தயாரிக்கப்பட்ட பற்றரி மீள் சக்தியேற்றும் கருவி 1 உட்பட பெருந் தொகையான பொருட்களே மீட்கப்பட் டன. (6)

# இடம்பெயர் மக்கள் சுதந்திர இடம்நகர்வு குறித்த அறிவிப்பு ஓர் தேர்தல் நாடகம்

# ஐ.தே.க தெரிவிப்பு

(கொழும்பு)

இடம்பெயர் மக்கள் சுதந்திரமாக இடம் நகர முடியும் என அரசாங்கம் நேற்று முன் தினம் விடுத்த அறிவிப்பு ஓர் தேர்தல் நாடகம் என ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் வடக்கு இடம்பெயர் முகாம்களில் தங்கியுள்ள மக்கள் சுதந்திரமாக இடம் நகரம் முடியும் என ஜனாதிபதியின் சிரேஸ்ட ஆலோ சகர் பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் செட்டிக்குளத்தில் வைத்து அறிவித்தார்.

எதிர்வரும் தேர்தல்களை இலக்காக வைத்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள் ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித் துள்ளார்.

சரியான ஏற்பாடுகளை மேற்கொள்ளாது மக்கள் மீள்குடியேற்றப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இடம்பெயர் முகாம் மக்கள் சுதந்திரமாக இடம் நகர அனுமதிப்பதன் மூலம் அநேக மக்கள் நகர் புறங்களில் குடி யேற முயற்சிக்கக்கூடுமென பிரதேச அர சாங்க அதிபர்கள் எச்சரிக்கை விடுத்துள்ள னர்.

உரிய உட்கட்டுமான வசதிகளை எற்படுத் தாது மேற்கொள்ளப்படும் மீள் குடியேற்றம் வெற்றிகரமாக அமையாது என சுட்டிக்காட் டப்படுகிறது. (6)

## ஜனாதிபதித்தேர்தல் அறிவிப்பின் பின்னர்

# இரு தரப்பிலும் கட்சித்தாவல்கள் ஏற்படும் சாத்தியம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் இரண்டு கட்சிகளிலும் கட்சித் தாவல்களை எதிர்பார்க்க முடியும் என சிங் கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள் ளது.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்க் கட்சிக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கும் தாவக்கூடிய சாத்தியம் காணப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்சித் தாவல்களுடன் தொடர்புடைய நபர் கள் ஏற்கனவே பேச்சுவார்த்தைகளை நடத்தி இறுதித் தீர்மானம் எடுத்துள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

ஆளும் கட்சியிலிருந்து எதிர்க்கட்சிக்கு தாவும் உறுப்பினர்களுடனான இணைப்பு நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய மற்றும் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் பத்து முக்கிய அமைச் சர்கள் தொகுதி அமைப்பாளர்கள் உள்ளிட்ட 30 பேர் எதிர்க்கட்சியுடன் இணைந்து கொள்ள வுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட் டுள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் மிக முக்கியமான செயற்பாட்டாளர் ஒருவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் சிலர் ஆளும் கட்சி யில் இணைந்து கொள்ளவுள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (6)






சாவகச்சேரி பிரதேச சபை கச்சாய் பொது நூலகத்தினால் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை நிர்வாக உத்தியோகத்தர் சி.பத்மநாதன் முன்பள்ளி மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவிகளின் வரவேற்பு நடன நிகழ்வையும் படங்களில் காணலாம்



யாழ்ப்பாணம் இலங்கை வங்கி இரண்டாம் கிளையினரால் அண்மையில் யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் நடத்தப்பட்ட "வர்த்தகமும் கணக்கியலும்" வழிகாட்டல் கருத்தரங்கில் வங்கி உத்தியோகத்தர் திருமதி அ.முரளிதரன் கருத்துரை வழங்குவதையும், வங்கியின் பாடசாலை அலகு உத்தியோகத்தர் கே.கே.விக்னேஸ்வரன், முகாமையாளர் என். சச்சிதானந்தன், வங்கி உத்தியோகத்தர் செல்வி.ப.சுபராஜினி, கல்லூரி உப அதிபர் திருமதி மீனலோஜினி செல்லையா ஆகியோர் அமர்ந்திருப்பதையும், கருத்தரங்கில் பங்குபற்றிய மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு அபிவிருத்தி உதவியாளர்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருந்த கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது என வட மாகாண உள்ளூராட்சி செயலாளர் திருமதி ஆர். விஜயலக்சுமி தெரிவித்துள்ளார். (6-9)

## பகவான் ஸ்ரீசத்ய சாயிபாபாவின் அவதார தின நிகழ்வுகள்

(அல்வாய்)

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 84 ஆவது அவதார தின நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பருத்தித்துறை, பிரதான வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் (சாயி மந்திர்) நடைபெறவுள்ளது.

நிகழ்வில் அதிகாலை 5 மணிக்கு நகர கீர்த்தனம், வேதபாராயணம், பிரசாந்திக் கொடியேற்றம் என்பவற்றை தொடர்ந்து பாபா புகழ் பாடுவோம் இன்னிசை, சர்வ தர்மப் பிரியர் சாயிபாபா குறும்படம் வெளியீடு, புட்டபர்த்தியில் சாயிபாபா வீடியோப் படக் காட்சி என்பனவும் நடைபெறவுள்ளது. (6-9-19)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக இருந்து ஆசிரிய உதவியாளர் நியமனம் பெற்றவர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக இருந்து ஆசிரிய உதவியாளர் நியமனம் பெற்ற அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பகுதி நேர ஆங்கில ஆசிரிய சங்கத்தலைவர் எஸ். ஞானேஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார். (6)

# வீதியைத் திருத்தி தருமாறு கோரிக்கை


(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கில் உள்ள விதானையார் ஒழுங்கை நீண்ட காலமாக திருத்தப்படாமையினால் அப்பகுதி மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருதனார்மடம் வீதிக்கும், உரும்பிராய் வடக்கு கற்பகப்பிள்ளையார் வீதிக்கும் இடையில் செல்லும் இந்தப் பாதை பத்து வருடங்களுக்கு முன் சாதாரமணாகப் புனரமைக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் அசாதாரண சூழ்நிலை காணப்பட்ட போது இந்தப்பாதையூடாகவே பெரிய, சிறிய வாகனங்கள் சென்று வந்தன.

இதனால் பள்ளங்களும், பெரிய குழிகளும் காணப்படுகின்றது.



எனவே இதனை மழை காலங்களில் மாணவர்கள், நோயாளிகள் மற்றும் பொது மக்கள் எல்லோரும் பயன்படுத்தத் தக்க வகையில் மறுசீரமைத்து தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனனர். (6)

## யாழ்.செய்திகள்

### பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 84 ஆவது அவதார தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் 84 ஆவது அவதார தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை கோப்பாய் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில் ஓம்காரம், சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனத்தைத் தொடர்ந்து காலை 9.30 மணிக்கு கொடியேற்றம் ஓம்காரம் வேதபாராயணம் அஷ்டோத்திரம் ஆகியன இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கோப்பாய் இளைப்பாறிய தபாலதிபர் ஸ்ரீ கா. காசிநாதர் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். மாலை 2மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில் ஆசியுரையை யாழ். மாவட்ட நீதிபதியும் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனத்தின் வடபிராந்திய தலைவருமான ஸ்ரீ.இ.வசந்தசேனன் வழங்கவுள்ளார். அத் துடன் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய ஆசிரியர் செல்வி குகனேஸ்வரி செல்லத்துரையின் கீர்த்தனம் மற்றும் நடனம் குழுப்பாடல், நாடகம் ஆகிய கலைநிகழ்வுகளுடன் வலம்புரி பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் எஸ். வெற்றிவேலாயுதம் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார். (6-4)

## செயலமர்வு

(அல்வாய்)

நட்புதவியாளர்களுக்கான மாதாந்த செயலமர்வு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பொறுப்பான ஆசிரியர்கள் அறிக்கையுடன் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா தெரிவித்துள்ளார். (11-9)

## திருநெல்வேலி

# சந்தை சுற்றாடலில் கொங்கிறீற் கற்கள் நிரப்பப்படாமையால் மக்கள் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிச் சந்தையில் துவிச்சக்கர வண்டி தரிப்பிடத்துக்கு போடப்பட்ட உடைந்த கொங்கிறீற் கற்கள் இன்னமும் மட்டப்படுத்தப்படாமல் உள்ளது. இதனால் சந்தைக்கு வருபவர்கள் பலவிதமான அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சந்தை சுற்றாடல்களிலிருந்து வீதி ஓரங்களில் வீசப்படும் சேதன, அசேதன கழிவுப் பொருட்கள் உரிய நேரங்களில் துப்பரவு செய்யப்படாது தேங்கி அழுகி சுற்றுப்புறச் சூழலை மாசடையச் செய்கிறது.

அதே நேரத்தில் வடிகால்களில் தேங்கும் கழிவுப் பொருட்களால் வெள்ள வடிகால் நீர் ஓடுவதற்கு வாய்ப்பின்றித் தேங்குவதால் டெங்கு, மலேரியா போன்ற நோய்க் கிருமிகள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் இதனைக் கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (6)

## பழுதடைந்த வெளியிணைப்பு இயந்திரங்கள் திருத்தம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மீனவர்களின் கொள்கலன் படகுகள் பழுதடைந்தால் அதன் வெளி இணைப்பு இயந்திரம் திருத்திக் கொடுக்கப்படும் என கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் செபஸ்தியாம்பிள்ளை யூட் தெரிவித்துள்ளார்.

தற்போது மழை காலமாதலால் இவ் வெளியிணைப்பு இயந்திரங்கள் அடிக்கடி பழுதடைவதாக தெரிவிக்கப்படுகிறது. (6-72)

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய் தடுப்பூசி வழங்கல்


(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நல்லூர் கொழும்புத்துறை அரியாலை ஆகிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி A.R.V. கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது.

இதில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணிவரை நல்லூர் பொதுச்சுகாதார பிரிவுக்குட்பட்ட அம்மன் வீதி ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்திலும் கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட சுவாமியார் வீதி ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்திலும் அரியாலை பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட கலைமகள் வீதி கலைகள் சனசமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இதேவேளை முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை நல்லூர் பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பழம் வீதி ஞான சோதி சனசமூக நிலையத்திலும் கொழும்புத்துறை பொது சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பாசையூர் சுவாமியார் வீதியிலும் அரியாலை பொதுச் சுகாதார பிரிவுக்குட்பட்ட ஆசீர்வாதப்பர் வீதி சாந்தி சனசமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத்தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியாதாஸன் கேட்டுக்கொண்டுள்ளார். (6-4)



பருத்தித்துறை புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலையின் பொன்விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) செ.உதயகுமார் மங்கல விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம்.

# நாடும் மக்களும்

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

59

கலாநிதி
**தெ.வே.மகாலிங்கம்**

ஒரு கோவிலைச் சுற்றி வசித்த மக்கள் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரிகள் பலவற்றை கோவில் அதிகாரிகளே வசூலித்துக்கொள்ளும்படி அரசன் உத்தர விடுவதும் வழக்கமாகும்.

கோவில்களில் இடிந்துபோன பகுதிகளை சீர்ப்படுத்துவதற்கும், புதிய மண்டபங்கள் அமைப்பதற்கும், தேர்த்திருவிழா அபிஷேக ஆராதனைகள் நடத்துவதற்கும் தானங் களும், அறக்கட்டளைகளும் வைக்கப் பெற்றன. தங்கத்தினாலும், வெள்ளியினாலும், விக்கிரகங்கள் வார்க்கப் பெற்றன. பொன்னும், மணியும், முத்தும், நவரத் தினங்களும் பதிக்கப் பெற்ற பல ஆபரணங்களும் கோவில்களுக்கு அளிக்கப் பெற்றன. நிலையான விளக்குகள் எரிவதற்காக "சாவா மூவா" பேராடுகளும் பசுக்களும் வழங்கப் பெற்றன. விக்கிரகங்களின் அபிஷேகங்களுக்கு வேண்டிய பால், நெய், பஞ்ச கௌவியம் முதலிய பொருட்கள் கோவிலிலுள்ள பசு மடங்களிலிருந்தே கிடைத்தன. விக்கிரகங் களுக்கு சூட்டப் பெறும் மாலைகளுக்கும், அர்ச்சனை செய்வதற்கும் உரிய புஷ்பங் களுக்கும் துளசிக்கும் ஏற்ற நந்தவனங்க ளும் கோவில்களுக்கு அளிக்கப் பெற்றன. சர்வமானிய இறையிலியாகக் கொடுக்கப் பெற்ற கிராமங்களுக்கு எடுத்துக்காட்டாக மாடம்பாக்கம் என்னும் ஊரில் சேர்வை ஆளுடைய நாயனார் கோவிலுக்குக் கொடுக் கப் பெற்ற சர்வமானிய இறையிலியைக் கொள்ளலாம்.

"ஓர் கிராமத்தின் நான்கு எல்லைகளையும் கூறி அக் கிராமத்தில் உள்ள நஞ்சை, புஞ்சை, நாற்பாகெல்லையும் உட்பட தோட்டம், புறம் போக்கு நிலங்கள் உட்பட மற்றும் தறியிறை, வெட்டிவரி, கார்த்திகைப் பாய்ச்சல், நற்கிடா, நல்லெருது முதலிய வரிகளும் சேர்த்து திரு நாமத்துக்காணியாக சந்திராதித்த வரையும் கொடுத்தோம்" என்பது கல்வெட்டின் வாச கமாகும்.

1520 ஆம் ஆண்டில் கிருஷ்ணதேவ ராயர், சோழ மண்டலத்தில் உள்ள சிவால யங்களுக்கும், வைணவத்தலங்களுக்கும் அறக்கட்டளையாக சோடி, அரசுப்பேறு, குலவரி முதலிய வரிகளிலிருந்து கிடைக்கும் பதினாயிரம் வராகன்களைக் கொடுத்துள் ளார்.

இரண்டாவது தேவராயர் சந்திரகிரி ராஜ் யத்திலுள்ள போரேற்றுப்பெருமாள் கோவி லின் அறக்கட்டளைக்காக 131 பொன் 6 1/4 பணம் கூடுதலுள்ள இரட்டைவரி (ஜோடி)யை அளிக்குமாறு தன்னுடைய அலுவலாளர் ஸ்ரீ கிரிநாத உடையாருக்கு உத்தரவிட்டுள் ளார்.

மேற்கூறப் பெற்ற படி தேவாலயங்க ளுக்குக் கிடைத்த நிலங்கள் அன்றியும் அவற்றின் வருமானத்தின் மிகுதியிலிருந்து கோவில்களுக்குப் பல வகையான நிலங் களும் கோவிலை நிர்வாகம் செய்வோரால் வாங்கப் பெற்றன.

இந் நிலங்களைப் பயிரிடும் குடியானவர் களை அரசாங்க அதிகாரிகளிடமிருந்தும் மற்றையோரிடமிருந்தும் கோவில் நிர்வா கிகள் காப்பாற்றினர். இரண்டாம் தேவராயர் ஆட்சியில் திருவொற்றியூர் கோவிலைச் சேர்ந்த நிலங்களைப் பயிரிட்ட குடியான வர்கள் மீது ஜோடி முகப்பார்வை அங்கசாலை சம்பாதம் விசேட தாயம் முதலிய வரிகளை விதித்தும் சர்வமானிய இறையிலி நிலங் களுக்கும் குத்தகை கொடுக்கப்பட வேண்டு மென அரசாங்க உத்தரவு வந்த பொழுது கோவில் அதிகாரிகள் அரசனிடம் முறை யிட்டனர்.

அதை விசாரித்த அரசன் மேற் கூறப் பெற்ற வரிகளையும் மற்றும் அரிசிக்காணம், நற்கிடா நல்லெருது, வெட்டி கட்டாயம் முத லிய வரிகளை நீக்கியும் தேவதான இறையிலி நிலங்களுக்கு வரியில்லை என்றும் உத்தர விட்டதாக நாம் அறிகிறோம்.

தரிசாகக் கிடந்த நிலங்களைப் பயி ரிட்டு உணவுப் பொ ருட்களைப் பெருக் குவதற்கும் கோவி ல்கள் உதவி புரிந் தன.

தேப் பெருமாள் நல்லூர் என்ற படைப் பாற்றில் கோவிலுக்குச் சொந்தமான இரண்டு. செய்களை திருமழிசையாழ்வார் கோவில் நிர்வாகிகள் உழவுக் காணியாக விலைக்கு வாங்கினர். இந்த இரண்டு நிலங்களும் மேடாக இருந்தமையால் அவற்றைப் பயிரிட முடியவில்லை.

அவைகளைச் சீர்திருத்தம் செய்து, நீர்ப் பாசன வசதிகள் ஏற்படுத்தி ஆண்டொன்றிற்கு 200 பணம் வருமானத்திற்கு குத்தகைக்கு விட்டதாக நாம் அறிகிறோம்.

1412 ஆம் ஆண்டில் மைசூர் நாட்டில் கோலார் ஜில்லாவில் உள்ள குருந்தமலை கோவில் ஸ்தானிகர்கள் திம்மண்ணன் என்ற ஒருவருக்கு சித்த சமுத்திரம் என்ற நீர்ப்பாசனக் குளத்தை வெட்டுவிப்பதற்கு தர்மசாசனம் செய்து கொடுத்துள்ளனர். வடவாற்காடு ஜில்லாவில் உள்ள திருப்பனங் காடு என்னும் கிராமத்தில் நீர்ப்பாசன ஏரி உடைத்துக்கொண்டு நிலங்கள் தரிசாகக் கிடந்த பொழுது அவ்வூர்க் கோவில் அதிகாரிகள் கோவிலுக்குச் சொந்த மான நிலங்களை விற்று அக்குளத் தைச் சீர்ப்படுத்த உதவி செய்தனர். தேவால யங்களுக்குச் சொந்தமான நிலங்களை தாங்கள் செலவில் சீர்ப்படுத்தி நிலத்தின் வரு மானத்தை அதிகரித்த தனிப்பட்ட நபர்களுக்கு கோவில்களில் சில அதிகாரங்களையும், பரி வட்டம், தீர்த்தம், திருநீற்றுப் பிரசாதம் முதலிய கௌரவங்களையும் வழங்குவது வழக்கம்.

கோவில்களின் அறக்கட்டளைக் குழுவி னர்க்குக் கோவில் நிலங்களை அடமானம் வைப்பதற்கும் அதிகாரம் இருந்தது. ஆனால், இவ்விதம் அடமானம் வைப்பதால் தர்மம் செய்தவர்களுடைய எண்ணங்களுக்கு மாறாக பல சங்கடங்கள் உண்டாயின. இச் சங்கடங்களை நீக்குவதற்காக, மூன்றாம் ஸ்ரீரங்கராயருடைய அலுவலாளரான சித்தா ரமப்பர் என்பர் தேவதான பிரம்தேய நிலங் களை அடமானமாகப் பெற்றவர்கள் பன்னி ரண்டு ஆண்டுகளுக்கு அனுபவித்த பிறகு வேறு தொகையைக் கேட்காமல் போக பத் திரம் எழுதிக்கொடுத்து நிலங்களைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென கிராமங்களில் வசித்த ரெட்டிகளுக்கும் கணக்குப் பிள்ளை களுக்கும் உத்தரவிட்டுள்ளனர். செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள மதுராந்தகச் சோழ சதுர் வேதி மங்கலத்தில் வாழ்ந்த பெரியோர்களும் கோனேட்டி அய்யன் என்ற அரசியல் அதி காரியும், தென்னாற்காடு ஜில்லாவில் மதுராந்தகச் சோழ சதுர்வேதி மங்கலத்தில் வாழ்ந்த பெரியோர்களும் கோனேட்டி அய்யன் என்ற ஜில்லாவில் சிந்தாமணி என்னும் ஊரில் வாழ்ந்த கோவில் அதிகாரி களும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். (தொடரும்)

## குருணாகலில் 20 இராணுவத்தினர் பன்றிக் காய்ச்சலால் பாதிப்பு

(கொழும்பு)

குருணாகல் பிரதேசத்தில் தீவிரமாகப் பரவி வருவதாகக் கூறப்படும் பன்றிக் காய்ச் சல் என்ற நோய் தற்போது குருணாகல் பிரதேசத்தில் சில இராணுவ முகாம்களுக் குள்ளும் பரவியுள்ளதாக குருணாகல் மாவட்ட சுகாதார சேவைப் பிரிவுகள் தெரிவிக் கின்றன.

இதுதொடர்பாக வடமேல் மாகாண சுகா தாரசேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆர்.எம். எஸ்.கே. ரத்னாயக்க கருத்துத் தெரிவிக்கை யில்,

குருணாகல், போயகனேவெஹெர இராணுவ முகாம்களில் தற்போது 20 இரா ணுவத்தினர் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள னர்.

இவர்களில் சிலருக்கு பரிசோதனை கள் மூலம் பன்றிக் காய்ச்சல் நோய் பீடிக் கப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள் ளது.

ஏனையவர்களிடம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


இதேவேளை இவ்வாறான நோய் அறி குறிகள் காணப்படக் கூடிய எவரையும் வீடு களுக்கு அனுப்பவேண்டாம் எனவும் விசேட வைத்தியக்குழு ஒன்று இராணுவமுகாம் களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கேயே சிகிச்சை அளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளதாகவும் முகாம் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரி வித்தார். (6)

## மருந்துக் குப்பியினுள் — கழிவுப் பொருள் —

(கொழும்பு)

அனுராதபுரம் போதனா வைத்தியசாலை யில் நோயாளர் ஒருவருக்கு வழங்கப்பட்டி ருந்த மருந்துக்குப்பி ஒன்றினுள் கழிவுப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. "இக் குளோசைன்" என்ற மருந்துக்குப்பி ஒன்றி னுள் கழிவுப் பொருள் உள்ளமை தொடர் பாக பிரதம மருந்தாளர் அறிவித்ததாக மேற்படி வைத்தியசாலையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக விசாரணை ஒன்றை மேற்கொண்டதன் பின்னர் அது குறித்து சுகாதார அமைச்சுக்கு தெளிவுபடுத்த வுள்ளதாக அனுராதபுரம் போதனா வைத் தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள் ளனர். (6-3)




தென்மராட்சி கிழக்கு அரிமாக்கழகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.எஸ். தங்கராசா பாடசாலை மாணவி ஒருவருக்கு கற்றல் உபகரணம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## அங்கவீனர்களுக்கான பஸ்சேவை — ஆரம்பிக்க நடவடிக்கை —

(கொழும்பு)


அங்கவீனர்களுக்கான புதிய பஸ் சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு இலங்கைப் போக்கு வரத்துச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அங்கவீனர்கள் பயணம் செய்யக்கூடிய வகையில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள் ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நடவடிக்கை அத்தியட்சகர் என்.கே.ஏ. டபிள்யூ. குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டசேவைகள் கொழும்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தோடு அதற்கென 6 பஸ்கள் ஒதுக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-9)

# கல்விப் பாரம்பரியமும் சேர்.பொன் இராமநாதனும்

03



**சைவ மங்கையர் வித்தியாலயத்தின் ஆரம்பகால அதிபராக இருந்த செல்வி நாகம்மாள் காசிப்பிள்ளையின் ஞாபகார்த்த விழாவைச் (23.05.2009) சைவமங்கையர் கழகம் நடாத்திய போது அதில் கலந்துகொண்ட பேராசிரியர்சி.க.சிற்றம்பலம்“சைவக்கல்வி பாரம்பரியமும் சேர்.பொன் இராமநாதனும் - ஒருநோக்கு” என்ற பொருளில் ஆற்றிய உரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

நீதி போதனைகளை அறிந்து நமது பழைய இலக்கியங்களைப் படித்து நல்ல வாழ்க்கை வாழவேண்டுமென்பதே அக்காலக் கலல்வியின் பிரதான நோக்கமாக இருந்தது. அக்காலக் கல்வியாளர்கள் வைத்தியம், சோதிடம், புராணபடனம், செய்யுள் இயற்றல் ஆகியவற்றிலும் தேர்ச்சி பெற்றுக் காணப்பட்டார்கள். மாணவர்களை ஒழுக்கசீலராக்கி ‘மாதா பிதா குரு தெய்வம்’ , எழுத்தறி வித்தவன் இறைவனாவான்’ என்ற கோட்பாட்டின் அடிப்படையில் வளர்த்தெடுப்பதே அக்காலக் கல்வியாளர்களின் பணியாகவிருந்தது. இக்கல்வி முறையில் நல்லொழுக்கம், மனிதநேயம், அறம்,நீதி, மனச்சாட்சியை முன்னிறுத்தல் ஆகிய பண்புகள் முன்னிலை பெற்றன. மேனாட்டார் வருகையும், அவர்கள் கடைப்பிடித்த அணுகுமுறைகளும், அவர்கள் உருவாக்கிய புதிய நிலைமைகளும் சைவ சமயப் பின்னணியில், சமய அறிவையும் உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட மரபுவழிக் கல்வியைப் பலவீனமடையச் செய்தது.

**நாவலர் பெருமானின் வருகையும் சைவசமயக் கல்வியின் மறுமலர்ச்சியும்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி ஈழத்தின் கல்வி வரலாற்றில் மிஷனரிமார் செல்வாக்குச் செலுத்திய காலமாகும். இவர்களுக்கு இருந்த பணபலம், நிறுவனக் கட்டமைப்பு, இவர்களது செயற்பாடுகள், அரசு இவர்களுக்கு வழங்கிய ஆதரவு ஆகியன இவர்களை முன்னிலைப்படுத்தியது. இவர்கள் தாங்கள் பணிபுரிந்த இடங்களிலெல்லாம் தேவாலயங்களை அமைத்து அவற்றுடன் பள்ளிக்கூடங்களையும் இணைத்திருந்தனர். மக்களை மதம் மாற்றுவதற்கு இவர்கள் அளித்த ஆங்கிலக் கல்வி ஒரு கவர்ச்சிகரமான பொருளாக அமைந்திருந்தது. காரணம் 1831 இல் வெளியிடப்பட்ட கோல்புறூக் கமிஷன் அறிக்கையில் ஈழத்தின் நிர்வாக சேவைக்கு ஆங்கில நாட்டிலிருந்து ஆங்கிலேயரைத் தருவிப்பதற்குப் பதிலாகச் சுதேசிகளுக்கு ஆங்கிலக் க்ல்வியினையூட்டுவதன் மூலம் செலவீனங்களைக் குறைக்கலாம் எனச் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக அரச உத்தியோகங்களை விளைந்தோருக்கு ஆங்கில கல்வித் தகைமை அவசியமாயிற்று. இதனால் இக் கல்வியைப் பெற விரும்பிய சுதேசிகள் மிஷனரிமாரின் பள்ளிக்கூடங்களிலே தான் அதைப் பெறக் கூடியதாக இருந்தது. சுதேசப் பாரம்பரியக் கல்வி முறையில் இதனை பெறுவதற்குரிய வாய்ப்புக் கிட்டவில்லை. இதன்காரணமாக இளைய சமுதாயம் ஆங்கிலக் கல்வியைப் பெற. முண்டியடித்தது.

மலைநாட்டில் ‘கோப்பிச் செய்கை எவ்வளவு துரிதமாக விருத்தியடைந்தோ அதே வேகத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கிறிஸ்தவ பாடசாலைகள் விருத்தியடைந்தன. கோப்பியினாற் கிடைத்த பெரு இலாபம் ஐரோப்பிய பெருந்தோட்டச் சொந்தக்காரரிடையே ஏற்படுத்திய கோப்பி வெறிபோல் (Coffee menia) அரசாங்க உத்தியோக வாய்ப்புக்கள் சைவர்கள் மத்தியில் ஆங்கில வெறியினை ஏற்படுத்தியது. இதனால் அக்காலத்து இளைய சமுதாயம் பாரம்பரிய மதம், பண்பாட்டு விழுமியங்கள், நடைமுறைகள் ஆகியனவற்றிலிருந்து அந்நியப்பட்டதாகவே காணப்பட்டது. தமது கலாசாரத்தின் சீரழிவினையும் அதற்கு கிறிஸ்தவப் பண்பாட்டுப் படர்ச்சியால் ஏற்பட்ட ஆபத்தினையும் கண்ட சிலர் இதுபற்றி ஆழமாகச் சிந்தித்தனர். இதன் விளைவே அக்காலத்தில் தோன்றிய சைவக்கல்வி மறுமலர்ச்சியாகும்.சைவர்கள் மத்தியில் மட்டுமன்றிப் பௌத்தர்கள் மத்தியிலும் இவ் விழிப்புணர்ச்சியின் விளைவாக மத மாற்றத்தைத் தடுக்கப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இம்முயற்சியின் வெளிப்பாடாக முதற் பள்ளிக்கூடம் 1842 இல் நல்லூரில் நல்லூர்க் கந்தசாமி கோயிற் குருக்களால் சமஸ்கிருத - தமிழ்ப்பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. இதன்நோக்கம் கிறிஸ்தவ பரம்பலைத் தடுத்துச் சைவசமய உண்மைகளையும் அவற்றின் மேம்பாட்டையும் மக்கள் மத்தியிற் பரப்புவதாகும்.

இம் முயற்சியில் தனிப்பட்ட நபர் களான வைத்திலிங்கச் செட்டியார் , முத்து வேலுச் செட்டியார், சிறாப்பர் குருநாத முதலி யார், இரகுநாத முதலியார் போன்றோர் ஈடுபட்டிருந்தாலுங் கூடப் பொதுவாக இதனை கிறிஸ்தவர்களின் செயற்பாட்டினால் முதியவர்கள் முடங்கியிருந்த காலம் எனலாம்.


இளையவர்கள் கிறிஸ்தவத்தின் மாயையில் தம்மையும் தம் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் மறந்திருந்த காலமுமாகும்.

இச்சூழலிற்றான் அன்றைய காலத்தின் தேவையாக ஆறுமுகநாவலர் அவர்கள் (கி.பி.1822-1879) தோன்றினார்கள். ‘இந்துக்களின் சீர்திருத்தச் செம்மல்’ எனச் சட்ட சபையில் சேர். பொன்.இராமநாதன் அவர்களால் போற்றப்பட்ட இவர் தமது அறிவு, அனுபவம், ஆளுமை ஆகியவற்றினால் மட்டுமன்றித் தம் வாழ்க்கையையே இதற்காக அர்ப்பணித்ததன் மூலம் இவ்வியக்கத்தின் கதாநாயகரானார்.

தமிழிலும் சைவத்திலும் ஆழ்ந்த புலமை பெற்றிருந்த நாவலர் அவர்கள் வண.பீற்றர் பேச்சிவலின் கீழ்ப்பெற்ற 14 வருட அனுபவம், அவர் ஏற்க இருந்த பொறுப்புக்குப் பொருத்தமாக அமைந்திருந்தது. கிறிஸ்தவ மிஷனரிமாருடன் சேர்ந்து செயற்பட்ட அந்தக் காலம் அவர்களுடைய யுக்திகளையும் அணுகு முறைகளையும் அறியவும், அவதானிக்கவும் நாவலருக்கு வாய்ப்பு அளித்தது. கிறிஸ்தவர்கள் பயன்படுத்திய கருவிகளான கல்வியையும் பிரசங்க மேடைகளையும் சைவர்களைத் தட்டி எழுப்பச் சிறந்த வகையில் நாவலர் அவர்கள் கையாண்டனர்.

தமது செயற்பாட்டின் மூலம் நாவலர் அவர்கள் முழுநேரக் கல்விப் பணியாளரானார். கற்றலும் கற்பித்தலுமே நாவலருக்கு வேலை. இளமைக்காலம் முழுவதையும் அவர் கல்வியிலேயே செலவிட்டார். சைவ நூல்களைத் தாமாகவே தேடிக்கற்றுக்கொண்டார். முதனூல்கள் சமஸ்கிருதத்தில் இருந்ததால் சமஸ் கிருதத்தையும் தாமாகவே கற்றுக்கொண்டார். இருபத்திமூன்றாம் வயதில் ‘ கற்பனவும் இனி அமையும்’ என்ற தமது கல்வியை ஒருவாறு நிறுத்திவிட்டுத் தமது இருப்பிடத்தில் வளர்ந்தவர்களைச் சேர்த்துக் காலையிலும் இரவிலும் கற்பிக்கத் தொடங்கினார்.வளர்ந்தவர்களுக்கு மட்டுமன்றி இளம் பிள்ளைகளுக்கும் சமயச் சூழலிலே கல்வி கற்பிக்க வேண்டுமென்ற வேட்கை நாவலருக்கிருந்தது. அவர் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசலாலைகளும் பதிப்பித்த நூல்களும் இவ் வேட்கையின் விளைவேயாகும். (தொடரும்)

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்



தியான நிலையில்
சேர்.பொன்னம்பலம் இராமநாதன்

## அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளும் எவ்விதத் திட்டமும் இல்லை

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளும் எவ்விதத் திட்டமும் கிடையாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர் மற்றும் என்.ஸ்ரீகாந்தா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கிஷோர் மற்றும் ஸ்ரீகாந்தா ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிதாவக்கூடும் என அண்மைக்காலமாக பரவலாக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இடம்பெயர் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்துடன் இணைந்து ஆக்கபூர்வமான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறெனினும் எதிர்க்கட்சிகளின் பொது வான வேட்பாளராக ஜெனரல் சரத்பொன் சேகா நியமிக்கப்பட்டால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் சில எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படக்கூடும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (6)

## உவர்நீர் தடுப்பணையை புனரமைக்கக் கோரிக்கை

(பொன்னாலை)

பொன்னாலை முதல்அராலித் துறை வரையிலான கடற்கரைப் பிரதேசம் மோசமான கடல் அரிப்பினால் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

சுமார் 4கிலோமீற்றர் நீளத்துக்கும் அதிகமான பிரதேசம் இவ்வாறு கடலில் மூழ்கிப் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கடற்றொழிலாளர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மோசமாக வீசிவரும் கடற்காற்றும் கடல் அரிப்பின்வேகத்தை தூண்டி வருவதாகவும் கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இப்பிரதேசத்தில் காணப்படும் உவர்நீர்த் தடுப்பணைகளை உரியமுறையில் புனரமைத்து கடல்அரிப்பை பாதுகாக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது . (ச-49)

## ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு ஒருபோதும் விலகப் போவதில்லை

### எஸ்.பி. திஸாநாயக்க



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸாநாயக்காவை அரசாங்க கட்சிக்குள் இணைத்துக் கொள்ள பாரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக பல்வேறு மட்டத்திலும் எஸ்.பி. திஸாநாயக்காவுக்கு ஆசை வார்த்தைகள் கூறப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் அரசாங்கத்துடன் இணைந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரங்களில் பங்கேற்றால் அடுத்து வரும் அரசாங்கத்தில் பிரதம மந்திரி பதவி வழங்கப்படும் என்ற உறுதியும் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் தாம் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகப் போவதில்லை என எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள் ளார். அரசாங் கத்தில் உள்ள பலர் தம்மை சந்தித்து பல உறுதி மொழி களை வழங் கியுள்ளதாக குறிப்பிட்ட அவர் ஐக் கிய தேசியக் கட்சி யை விட்டு ஒரு போதும் வில கப் போவதில்லை என வும் எதிர்கா லத்தில் பல திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

இந்த நிலையில் எஸ்.பி. திஸாநாயக்க கடந்த 19 ஆம் திகதி எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளார்.

எஸ்.பி. திஸாநாயக்கவை ஐ.தே.க. சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்திருந்த நிலையில் அம்முயற்சி கைகூடாததன் காரணமாக அவர் ஐ.தே.க.மீது கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதை நினைத்து அரசுத் தரப்பினர் அதைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (6)

## அவதார தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் 84 ஆவது அவதார தினத்தை முன்னிட்டு யாழ். மத்தி பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையம் இன்று காலை 4.45 மணிதொடக்கம் நிகழ்வுகளை நடத்தவுள்ளது.

இதில ஓம்காரம், சுப்ரபாதம், சாயிகணபதி அபிஷேகம், விசேடபூஜை, காயத்திரி மந்திரம்,பிரசாந்தி கொடியேற்றல், பிறந்த தின வாழ்த்துப்பாடல், நாடகம், கலைநிகழ்வு, மதியபோசனம் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (9)


# க.பொ.த சாதாரண தரப் பரீட்சை-2009
# பயிற்சி வினாத்தாள் -விஞ்ஞானம்

## பகுதி-II

வலிகாமம் கல்வி வலய ஆசிரியர் குழு


### இரசாயனவியல்

(01)சல்பூரிக்கமிலம் துமிக்கப்பட்ட நீரை மின் பகுப்புச் செய்யும் ஆய்வுக்கூடச் செயற்பாடு ஒன்றை படம் காட்டுகிறது.



(அ) 1- அனோட்டில் விடுவிக்கப்படும் வாயு எது?
2- கதோட்டில் விடுக்கப்படும் வாயு எது?
3- மின்பகு கரைசலில் காணப்படும் அயன்களை குறிப்பிடுக?
4- மறைமின் வாயில் நிகழும் தாக்கத்திற்கான சமன்பாட்டை எழுதுக?
5- இங்கு சேகரிக்கப்படும் வாயுக்களை இனம் காண்பதற்கான சோதனைகளை குறிப்பிடுக.


(ஆ) இரும்பு ஆணி ஒன்றிற்கு வெள்ளி முலாமிடும் செயற்பாடு ஒன்றை படம் காட்டுகிறது.




1- இங்கு அனோட்டமாக அமையும் பகுதி எது?
2- ஆளியை மூடும் போது உமது அவதானம் ஒன்றை குறிப்பிடுக?
3- கதோட்டில் நிகழும் தாக்கச் சமன்பாட்டை எழுதுக?
4- இங்கு பயன்படுத்தும் மின்னோட்ட வகை யாது?
5- மின்முலாமிடலின் பயன்கள் 02 எழுதுக?

(02)ஆய்வு கூடத்தில் வெப்பமாக்க பயன்படுத்தப்படும் அமைப்பை படங்கள் காட்டுகின்றன.

(அ)





1- உரு I, II இல் நிகழும் தகன வகைகளை குறிப்பிடுக?
2- உரு I,II இல் பயன்படும் எரிபொருட்களை எழுதுக?
3- மேலே குறிப்பிட்ட அமைப்புக்களில் சுவாலையின் நிறத்தை மாற்றக்கூடிய அமைப்பு எது?
4- இங்கு நடைபெறும் சக்தி மாற்றங்களை எழுதுக?
5- விறகு அடுப்பை விட மண்ணெய் அடுப்பை பயன்படுத்துவதால் ஏற்படும் அனுகூலங்கள் 02 எழுதுக?

(ஆ) தகனம் நிகழ்வதற்கு மூன்று காரணிகள் அவசியமாகும்.
1- தகனம் நிகழ்வதற்கு தேவையான காரணிகள் எவை?
2- தகனம் நடைபெறுவதை கட்டுப்படுத்த பயன்படும் வாயு எது?
3- சோடா அமிலத் தீயணைக்கருவியில் நடைபெறும் தாக்கச் சமன்பாட்டை எழுதுக?
4- மின்சாதனங்கள், வாகனங்களில் ஏற்படும் தீயை அணைப்பதற்கு பயன்படும் தீயணை கருவி எது?
5- எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தீ விபத்தை தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் 02 தருக?

### உயிரியல்

(03)

(அ) இருவித்திலைத் தாவரப் பூ ஒன்றின் நெடுக்கு வெட்டு தோற்றத்தை படம் காட்டுகிறது.



1- மேலே தரப்பட்ட பூ எவ்வகை இனப்பெருக்கத்திற்கு உரியது?
2- அயன் மகரந்தச் சேர்க்கை நிகழ்வதற்கு இப்பூவில் காணப்படும் சிறப்பியல்பு ஒன்றைத் தருக?
3- கருக்கட்டலின் பின் இப்பூவில் நிகழும் மாற்றங்கள் 02 எழுதுக?
4- தாவரங்களில் நிகழும் செயற்கையான இனப்பெருக்க முறைகள் 02 எழுதுக?
5- வேர்த்தண்டு கிழங்கு மூலம் இனம் பெருகும் தாவரங்கள் 02 எழுதுக?

(ஆ) அங்கிகளில் ஆண், பெண் புணரிகள் இணைவதன் மூலம் இலிங்கமுறை இனப்பெருக்கம் நிகழ்கின்றது.
1- மனிதனில் உருவாக்கப்படும் ஆண், பெண் புணரிகள் எவை?
2- ஆண் புணரிகள் உருவாக்கப்படும் இடம் எது?
3- ஆண், பெண் களில் இலிங்க முதிர்ச்சியை ஏற்படுத்தும் ஓமோன்கள் எவை?
4- முதிர் மூலவுருவில் இதயத் துடிப்பை வெளியில் உணரக் கூடிய காலம் யாது?
5- கர்ப்பகாலத்தில் முதிர்மூலவுருவுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய நோய்கள் 02 தருக?


(04)பூக்கும் தாவரங்களின் வேரின் குறுக்கு வெட்டை படங்கள் காட்டுகின்றன.

(அ)




1- அமைப்பில் உரு I, II ஆகியவற்றை இனம் காண்க?
2- உருவில் மாறிழையத்தை கொண்ட அமைப்பு எது?
3- மண்ணில் உள்ள கனியுப்புக்கள் இலை வரை செல்லும் பாதையை ஒழுங்காக தருக?
4- உயரமான தாவரங்களில் நீர் கனியுப்புக்கள் மேல்நோக்கி கடத்தப்பட உதவும் விசைகள் எவை?
5- உயிர்ப்பான கொண்டு செல்லல் என்றால் என்ன?

(ஆ) பிரசாரணச் செயற்பாட்டை அறிய மாணவர் குழு மேற்கொண்ட செயற்பாட்டை படம் காட்டுகின்றது.





1-சில மணித்தியாலங்களின் பின் அமைப்பில் ஏற்படும் அவதானம் யாது?
2-உமது அவதானத்திற்கான காரணம் யாது?
3-தாவரங்களிற்கு செயற்கை வளமாக்கிகள் இட்டு நீர் ஊற்றப்படாவிடின், தாவரம் வாடிக் காணப்படக் காரணம் யாது?
4-முந்திரிகை வற்றலை நீரில் இட்டு சிலமணியின் பின் உமது அவதானம்யாது?
5-தாவரங்களில் நீரை அகத்துறிஞ்சும் அமைப்பு எது?

### பௌதிகவியல்


(05)

(அ) அணைக்கட்டு ஒன்றின் மாதிரி படத்தில் காட்டப்பட்டுள்ளது. இவ் அணைக்கட்டிலிருந்து நீரானது வயல்களிற்குப் பாய்ச்சப்படுகிறது.




1-அணைக்கட்டில் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீர் கொண்டுள்ள சக்தி யாது?
2-குழாயினூடாக நீர் பாயும் போது ஏற்படும் சக்தி மாற்றத்தை தருக?
3-குழாய் வழியாக வெளியேறிய **500kg** நீர் வாய்க்கால் வழியாக ஓடும் போது ஏற்படும் சக்தியின் அளவை **kJ** இல் தருக? (ஓடும் நீரின் வேகம் **100 m/s**)
4- **B** என்ற புள்ளி மேல் மட்டத்திலிருந்து **6m** ஆழத்தில் உள்ளது. **B** யிலுள்ள அமுக்கம் யாது? (நீரின் அடர்த்தி 1000 $kg\ m^{-3}$ $g=10ms^{-2}$)


(ஆ) ஒளியின் நடத்தை ஏற்படும் மாற்றத்தைக் காட்ட மாணவன் அமைத்த உபகரணம் அருகேயுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது.




1- ஒளி முறிவு என்றால் என்ன?
2- முதலாவது ஒளி முறிவு விதியைத் தருக?
3- வெள்ளொளிக் கற்றை ஒன்றை கண்ணாடி அரியத்தினூடாக அனுப்பும் போது உண்டாகும் திருசியத்தை காட்டுவதற்குரிய படத்தை வரைக?
4- முழு அகத்தெறிப்பு நிகழ்வதற்கான நிபந்தனைகள் எவை?
5-கண்ணாடிக் குற்றி ஒன்றினூடாக மேலிருந்து பார்க்கும் போது கண்ணாடிக் குற்றி **8cm** ஆகத் தோற்றமளிக்கிறது. கண்ணாடிக் குற்றியின் முறிவுச் சுட்டி **1.5** எனின் கண்ணாடிக் குற்றியின் உண்மையான தடிப்பு யாது?


(06)

(அ) ஆய்வு கூடத்தில் மாணவர் குழு மேற்கொண்ட பரிசோதனை அமைப்பு தரப்பட்டுள்ளது.





1- **A, B, X, Y** எனும் உபகரணங்களின் பெயர்களையும் அவற்றின் பயன்களையும் தருக?
2- இப்பரிசோதனையை மாணவன் அமைத்ததன் நோக்கம் யாது?
3- இச்சுற்றிலுள்ள வழுக்கள் **02** ஐக் குறிப்பிடுக?
4- இவ் வழுக்களை நிவர்த்தி செய்த படத்தை மீண்டும் வரைக?

5- a) இச்செயற்பாட்டில் மாணவனால் பெறப்பட வேண்டிய அளவீடுகள் எவை?
b) அவ் அளவீடுகளைப் பயன்படுத்தி பெறக்கூடிய வரைபை வரைக?
c) வரைபிலிருந்து பெறக்கூடிய முடிவு யாது?
d) இதிலிருந்து பெறும் விதியை முன் வைக்க?
e) **12v** மின்னழுத்த பேறுபாடு உடைய கடத்தி ஒன்றினூடாக **3 A** மின்னோட்டம் பாயும் போது கடத்தியின் தடை யாது?



# பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபாவின் 84 ஆவது அவதார தினம்



## ஏர்த்தெம்மை ஆட்கொள்ளும் சாயிநாதா

பொங்குமன்பை புவனமெல்லாம் உணரவைத்தாய் உன்
பொற்கழல்கள் போற்றுகின்றோம் சாயிதேவா
எங்கும் நிறை அவதார சாட்சியாக
எத்துவாரைக் காத்து நிற்கும் ஏகன் நீயே
அங்குமிங்கும் அலைகின்ற மனதைக் கட்டி
ஆளுகின்ற வரந்தருவாய் மக்களெல்லாம்
காங்குள் பகல் உனை நினைக்க அருளும் செய்து
காலாற வரந்தருவாய் சாயிநாதா

சி.ஆறுமுகம்
சட்டநாதர் கோவிலடி.



## அகிலம் போற்றும் அன்பு சாயி

அகிலம் போற்றும் அன்புசாயி
அன்பே ஒருமதமெனும் அன்புசாயி
சகமெலாம் நிறைந்த கடவுளொரு
வரேயென உரைக்கும் அன்புசாயி
அகமொழியே அனைவரும்பே சும்மொழியெனும்
அகிலம் புகழும் அன்புசாயி
இகத்தில் வாழும் மனித
ரெல்லாமொரே இனமெனும் அன்புசாமி

பா. பாலச்சந்திரன்
மயிலணி

## சாயி சேவையில் இளம் சமூகத்தினரின் பங்கு

இளமைப் பருவம் வலிமை மிகுந்தது. நிகரில்லாதது இன்பமயமானது .உண்மைகளை அறியும் ஆர்வம் நிறைந்தது. ஆகவே இப் பருவத்தில் சேவையில் ஈடுபடுவதனால் நிறைந்த பயனை அடைய முடியும் பகவான் இளைஞர்களை சேவையில் ஈடுபடத் தூண்டுவதன் காரணம் இதுவே.

சாயி சேவை ஆத்மீக சேவை அது ஒரு ஆத்மீக சாதனை ஆத்மீக நாட்டமுடையவர்களுக்கு நிறைந்த பக்தி அறச்சிந்தனை நல்லொழுக்கம் பகவானுக்கு சேவை செய்வதில் ஆர்வம் கல்வித்தகமை முதிர்ந்த ஞானம், துன்பத்தை மகிழ்ச்சியுடன் கல்வித் தகைமை முதிர்ந்த ஞானம், துன்பத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளல் தன்னடக்கம் பணிவு ஆகிய நற்குணங்கள் இருக்கவேண்டும்.

பகவானின் நிறுவனங்களிலோ மக்கள் சேவையிலோ ஈடுபடும் சந்தர்பங்களில் பல பதவிகளை ஏற்று பணியில் ஈடுபடும் போது ஆலயத்துக்கு செல்லுமுன்பு உடல் சுத்தம் செய்து அழுக்கை நீக்குவது போல் ஆத்மீகத்தில் ஈடுபடும் போது எமது அகங்காரத்தை நீக்க வேண்டும் மற்றவர்களிடம் இருந்து தான் வேறு பட்டவர் என்பதை கணிப்பதுதான் இந்த அகங்காரம் (Ego) அகங்காரம் எற்படும்போது ஒருவர் மற்றவரை நிந்திக்கிறார். அவமானப்படுத்துகிறார். அதைத் தவிர்க்க வேண்டும் எந்த ஒருவரையும் சொல்லாலோ செய்கையாலோ சிந்தனையாலோ நோகச் செய்வதை தவிர்க்க வேண்டும். என்று பகவான் கூறுகிறார்.

மேலும் பகவான் கூறுகின்றார். உங்களுடைய உச்ச நிலை மேலாண்மை உரிமை அதிகாரம் ஆகியவற்றை மற்றவர் மேல் கையாளவேண்டாம். மற்றவர்களும் உங்களுக்கு சமம் என்று கருதுங்கள் நீங்கள் எப்பொழுதும் அமைதி பேணுங்கள். பிரச்சினைகளைக் கண்டு அன்பினால் திருத்துங்கள் அன்பாகப் பேசி மற்றவர்களின் குற்றங்களை அன்பினால் திருத்த வேண்டும்.

சேவையில் ஈடுபடும் போது ஒருவரது இதயம் அன்பால் நிரம்புகிறது. அன்பின் முழுமையான வளர்ச்சியே பிரேமை எனப்படும் தெய்வீக அன்பாகும். துன்பங்களுக்கெல்லாம் காரணமான அறியாமையை நீக்குவதற்கான ஒரே வழி மனிதகுல சேவையே எல்லா உயிர்களையும் வேறுபாடின்றி நேசித்துக்கொள் எல்லா உயிர்களுக்கும் சேவை செய்யக் கற்றுக்கொள் என்கிறார் பாபா.

சேவையில் ஈடுபடுவதனால் உலக இயல்பை நீ உணர்ந்து கொள்வாய் அன்பை வளர்த்துக் கொள்ளும் போது பிரேமை என்னும் தெய்வீக வெளிப்பாட்டை அடைவாய் என்கிறார். எனவே பொன்னும் பொருளும் போகமும் புகழும் தேடி அறியாமையில் ஆழ்ந்து விடாமல் மனதை தெய்வீகத்தை நோக்கித் திருப்பினால் சத்தியம், சாந்தி, பிரேமை போன்ற நிகரற்ற செல்வங்களை அடைந்துகொள்கிறாய் சேவை ஒன்றினாலேயே இந்த தெய்வீக பேறுகளை அடைய முடியும் என்று கூறுகின்றார்.

தெய்வீகத்தை அடையும் வழி மனிதகுல சேவையே இளம் சமூகத்தினர் சேவைப் பணியினை உணந்து செயற்பட்டால் நாம் அளப்பரிய நன்மைகளை அடையலாம்.

ஜெய்சாயிராம்
செல்வா

## அன்பின் வடிவம் சாயி

ஓம் ஸ்ரீ சாயிராம் ! நினைவில் சத்தியமாகவும் செய்கையில் நலமாகவும் உணர்வில் அழகாகவும் விளங்கும் அன்பே வடிவமான எல்லாம் வல்ல இறைவன் ஸ்ரீ சத்திய சாயி பாபாவிற்கு இன்று அகவை 84 இல் உலகில் வாழும் மனிதர்களின் துன்பங்களும் துயரங்களும் அதிகரித்து துயர் துடைக்க யாருமில்லையே என்ற இரங்கல் ஒலி மனிதர்களிடையே பரவும் போது இறைவன் இரக்கப்படுகின்றான்.

இரக்கமடைந்த இறைவன் அநியாயத்தை உணராதவனுக்கு அதை உணர்த்தவும், தர்மத்தை போதிப்பதற்கும் நீதியை உரைக்கவும், ஆன்மீக வழியைக் காட்டவும் 1926ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ஆம் திகதி பெரியார் வெங்கம்மா ராஜுவுக்கும் தெய் வத்தாய் ஈஸ்வராம்பாவிற்கும் தெய்வக் குழந்தையாக பகவான் அவதரித்தார்.

அண்ட சராசரங்கள் அத்தனையையும் தன்கை அசைவில் அசைத்து அன்பெனும் ஊற்றினால் நினைத்து ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று எமைக் காக்கும் இறையாக கேட்பவற்றை எல்லாம் அளிக்கும் பரம்பொருளாக வந்துதித்த பகவான் பாபா தனது சிறு பராயத்தில் இருந்தே பல அற்புதங்களை நிகழ்த்தி வந்த போதும் தன் 14ஆவது வயதில் தன் தாய் தந்தை சகோதரர்களிடம் உறுதியான அறிவிப்பொன்றை அறிவித்தார். நான் இனிமேல் உங்களைச் சார்ந்தவன் அல்ல மாயை என்னை விட்டு விலகியது என் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் அடியார்களுக்கு சேவை செய்யப்போகிறேன் என்று சொல்லி தனக்கென ஒரு ஆச்சிரமம் அமைத்து அன்பெனும் அருளாட்சியை அருளத் தொடங்கினார்.

ஸ்வாமியின் லீலா விநோதங்களை, அற்புதங்களை, அருள் ஆசிகளை ஆராய முயன்று தோல்வியுற்று மனிதனின் வார்த்தைகள் எங்கிருந்து திரும்புகின்றனவோ கற்பனையாலும் அடைய முடியாதது எதுவோ அதுதான் பரந்த தெய்வம் பாபா என ஒப்புக்கொண்டு ஸ்வாமியின் அடியார்கள் என சரணாகதி அடைந்த விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் எத்தனையோ பேர் .

பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் பல்வேறு முனிவர்களால் எழுதப்பட்ட பண்டைய கிரந்தங்களில் கூட ஸ்வாமியின் இவ் வவதாரம் பற்றிய குறிப்புகளைக் காணலாம். அந்த வகையில் அகத்தியர் நாடியில் "இரக்கமும் அன்பும் நிறைந்த திருவடிவமாக மக்களின் தீராத நோயை எல்லாம் மின் னல் வேகத்தில் குணப்படுத்துபவராக மக்களிற்கு நல் ஆரோக்கியம் வழங்குபவராக காணப் படுவார். முன்னைய அவதாரத்தில் ஷிர்டி ஸாயி பாபாவாக இருப்பார். என்றும் சுக்கிர நாடியில் அவர் தங்கியிருக்கும் இடம் பிரசாந்தி நிலையம் என அழைக்கப்படும். சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை எனும் கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக வகுத்துக் கூறுவார். என்றும் சொல்லப் பட்டுள்ளது. இது தவிர பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த புகழ் பெற்ற தீர்க்கதரிசி நொஸ்ரடாமஸ் என்பவர் தனது சென்சுறிஸ் (Centuries) என்னும் புத்தகத்தில் வரவிருக்கும் உலகை ஆள்பவர் வியாழக்கிழமைகளை புனித நாட்களாக நினைப்பார். உலக்ததின் அனைத்து நாடுகளும் அவரைப் பார்த்து வியக்கும் என்று கூறியிருக்கின்றார்.

இரக்கமும் பிரேமையும் கலந்த திருவடிவமான பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் தெய்வீகத் தன்மையை இவ்வாறெல்லாம் முன்னைய காலங்களில் விபரித்த தீர்க்க தரிசனங்களில் மட்டுமன்றி நிகழ்காலங்களில் நேரடியாக எம்மாலும் உணரக் கூடியதாக உள்ளது.

கலியுகத்தில் மோட்சமளிக்கக்கூடிய மார்க்கம் சாயி மார்க்கமே பகவான் சாயி ஒரு திவ்ய ஜோதி "என் ஜீவியமே என் போதனை" என்று அருளிய பகவானின் வார்த்தை நமக்கு பூ விரித்த பாதை எல்லாம் வல்ல இறைவனின் இவ் அவதார காலத்தில் நமது வாழ்க்கைக் காலம் அமைந்தது நாம் செய்த பாக்கியமே . எனவே நமக்குள் நாம் பகவானைக் காண்போம். பகவான் தனக்குள் எம்மைப் பார்த்துக் கொள்வர். எச் சமயத்தவரும் சரி, எவ்வினைத்தவரும் சரி, எந்நாட்ட வரும் சரி, கூடுங்கள் நித்தமும் பகவானின் திருநாமம் சொல்லி.

ஜெய்சாயிராம்
யாதவன்.

# பர்த்திபுரி வாழ் பகவான் ஸ்ரீ சத்யசாயி

அவதார புருஷர்களின் வருகையால் ஆத்ம ஞானத்தையும் அடையொணா அத்வை நிலையையும் காலாகாலமாக பெற்றுவரும் பெரும்பாக்கியமுடையது இப்புவி சகல ஜீவராசிகட்கும் பசி தாகம் போன்ற பல தேவைகள் விருப்பு வெறுப்புக்கள் ஆசா பாசங்கள் இருக்கின்றன.

ஆனால் பிறவி அதன் நோக்கம் அதையடையும் மார்க்கங்கள் அதற்கான உத்திகள் பயன்பாடுகள் நோக்கத்தை நிறைவேற்றும் சித்தம் பலம் யாவும் ஒருங்கே கொண்டிருப்பவன் அல்லது அவை பற்றிய அறிவையோ விழிப்புணர்வையோ நாட்டத்தையோ கொண்டவன் மானுடன் ஒருவனே .அதனால் அவன் படைக்கப்பட்டவற்றுள் ஓர் உயர்ந்த படைப்பாகிறான்.

அந்த உயர்படைப்பிற்காக அதன் பிறவித்தளையை நீக்குதற்காக யுகம் தோறும் அவதாரங்கள் இப்புவிக்கு வருகின்றனர், அவதரிக்கின்றனர்.

அவதார புருஷர்களின் வருகை சாதாரணமான ஒன்றன்று திரிகால ஞானிகள் அவதாரங்களின் வருகையை நன்கு அறிவர். பக்குவமான ஆன்மாக்கள் இறை அசரீமூலமோ கனவின் மூலமோ இறைவனின் மாறுவேடத்தில் வந்து கூறிய விடயங்களின் மூலமே இதை அறிந்திருந்தனர். சமய இலக்கியங்கள் இதிகாச புராணங்கள் முதற்கொண்டு அவதார புருஷர்களின் வாயிலாகவும் மக்கள் பின்னர் வரவிருக்கும் அவதாரங்களை அறிய வாய்ப்பேற்பட்டிருப்பது குறிப்பிடபத்தக்கது.

பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா 1926 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புட்டபர்த்தியில் திருவதாரம் செய்தார். இவ்வவாதாரம் இப்புவிக்கு வருமுன்பும் வந்தபோதும் அதன் பின்னரும் இன்றும் தன் அருகிலோ தொலைவிலோ இருப்பவர் என்னும் நேர கால இட பரிமானங் களுக்கப்பால் பல அற்புதங்களை நிகழ்த்தி வருவது சாயி பக்தர்களுக்கு புதிய செய்தியல்ல.

சிறுபிராயம் முதற்கொண்டு இன்றுவரை பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா யாவருக்கும் போதனையும் சன்மாாக்க ஆற்றுகையும் செய்து வருவது நிதர்சனமானது பஜனை, நகரசங்கீர்த்தனம், அகண்டநாம பஜனை, சேவை, மனித மேம்பாட்டுக்கல்வி (Educara) என பல்வேறு மார்க்கங்கள் மூலம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா மனிதனின் பிறவிப்பிணியை நீக்கும் மாபெரும் பணியை ஆற்றி வருகின்றார்.

இப்பிறப்பிலோ முற்பிறப்பிலோ செய்த புண்ணிய பலன்களால் பலர் பகவான் ஸ்ரீசத்திய சாயியை அவதாரம் என ஏற்று அவர் காட்டிவரும் சன்மார்க்கத்தினை பின்பற்றுகின்றனர். பகவானின் அருட்கைகளால் சிருஷ்டிக்கப்படும் உத்தம பிரசாதமான வீபூதியைச் நேரடியாகவோ பிறர் வாயிலாகவோ பெற்றும் பயன் பல பெறுகின்றனர்.தங்க வெள்ளி ஆபரணங்கள் இறை ஸ்வரூபங்களை தகுதியுடைய பக்தர்கள் சுவாமியிடம் இருந்து சிருஷ்டிக்கப்பட்டு பெற்றுக் கொள்கின்றனர்.


ஸ்ரீ சத்திய சாயிபாபா ஆரம்பத்தில் பஜனைகள் போதனைகள் பாலவிகான் சேவை என பல விடயங்களை ஆரம்பித்தார். சிறுவர்களுக்கான பாலவிக கவ்வியை மனித மேம்பாட்டுக் கல்வியாக மெருகூட்டி உலகெங்கும் ஒரு பாடத்திட்டம் பயன்படுத்த ஏற்பாடு செய்தார். புட்டபர்த்தியில் பல பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், சிறப்பு வசதிகளைக்கொண்ட வைத்தியசாலை, குடிநீர், மின்சார தங்குமிட, போக்குவரத்து வசதிகள் சாயி அன்பார்களால் சாயினின் வழிகாட்டலால் அமைக்கப்படுகின்றன.

சாயி என்றால் உண்மைத்தாயும் தந்தையும் என்பது பொருள் இப் புவிவாழ் மானுடர்களுக்கும் மற்றும் தேவர்களுக்கும் மூவருக்கும் முதற்பொருளாம் அம் முழுப்பொருள் பூலோகத்திற்கு வந்தால் அதன் மகிமையை யாரால் கூறமுடியும்.

திருமதி சண்முகயோகினி ரவீந்திரன்
சிரேஷ்டவிரிவுரையாளர் யாழ்.பல்கலைக்கழகம்

# விவாத அரங்கு 1

## ஆசிரியர்களின் திறமைகள் பகிரப்படுவதற்கு இடமாற்றம் தேவை



எனது பாடசாலைப பருவத்தில் கூட நான் ஆசிரியர்களின் இட மாற்றம் தொடர்பாக நான் அறிந்திருந்தேன். அக்காலகட்டத்தில் பாடசாலை மாணவனாக இவ்விடயத்தை நோக்கிய போது ஆசிரியர்களின் இடமாற்றம் அவசியமற்றதாக வும் நியாயமற்றதாகவுமே எனக்குத் தோன்றியது.

ஆனால் இப்போது சமூகத்தில் ஒருவனாக இருந்து இவ் விடயத்தினை நோக்கும் போது இதன் அவசியத்தையும், நியாயத் தன்மையும் புரிந்து கொண்டேன். இதற்கு காரணம் பாட சாலையில் இருக்கும் போது ***நான் எனது பாடசாலை*** என சுயநல சிந்தனையைக் கொண்டிருந்தேன். ஆனால் இப்போது ***நாம் எமது பாடசாலைகள், எமது சமூகம்*** என பொது நலச் சிந்தனை மனதிற் குடிகொண்டிருக்கிறது.

ஏழு வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமை யாற்றிய ஆசிரியர்களின் இடமாற்றம் நியாய மான அவசியமானது என்பதற்கு எனது பார்வையில் சில காரணங்கள் இருக்கின்றன. அவற்றை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

குறித்த சில பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகள் அப் பாடசலையில் அவர்கள் கொண்டிருக்கும் சேவைக் காலத்தினை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்படுகின்றன. இதனால் சில சிரேஷ்ட ஆசிரியர்கள் தேவையற்ற மன உளைச்சல்களுக்கு ஆளாக வேண்டிய சூழ்நிலை எற்படுகிறது.

ஓர் ஆசிரியர் ஓர் பாடசாலையில் தொடர்ச்சியாக 12 வருட கால சேவையை நிறைவு செய்து வேறோர் பாடசாலையில் தனது கடமையை தொடங்கி இரு வருடங்கள் நிறைவேறுகிறது. குறித்த இப் பாடசாலையில் வேறொரு ஆசிரியர் தனது முதல் நியமனத்தை பெற்று 05 வருடங்களை பூர்த்தி செய்திருக்கிறார். இந் நிலையில் பாடசாலையில் கொண்டிருக்கும் சேவைக் காலத்தில் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படுதல் நியாயமற்றதாகவே இருக்கும். எனவே பாரபட்சமின்றி ஏழு வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களினை இடமாற்றம் செய்யும் போது மேற்குறித்த இப் பிரச்சினை எற்படுவதற்கான சந்தர்ப்பம் மிக மிக அரிதாகும்.

ஆசிரியர்கள் ஓர் பாடசாலையில் நியமனம் கிடைத்து சென்றவுடன் மிகவும் வினைத்திறனாக செயற்பட்டு தமது உத்தம மட்ட சேவையை வழங்குவார்கள். காலம் செல்லச் செல்ல இவ்வினைத்திறன் குறைவடைந்து வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். இந்நிலையில் அவர்கள் தொடர்ந்து இருக்கும் போது அது மாணவர் சமூகத்திற்கும், குறித்த அப் பாடசாலைக்கும் நல்லதல்ல. இந் நிலையில் அவர்களுக்கு ஓர் இடமாற்றத்தினை வழங்கும் போது.புதிய பாடசாலை, புதிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என்ற ஓர் புத்துணர்ச்சியும் கடமையுணர்வும் ஏற்பட மீண்டும் பழைய வினைத்திறனோடு தமது உத்தம மட்ட சேவையை வெளிப்டுத்துவார்கள்.

எனவே இவ் இடமாற்றம் என்பது ஆசிரியர்களுக்கான ஓர் தண்டனையோ அல்லது அவர்களுக்கு எதிரான ஓர் காரணியோ அல்ல. மாறாக அவர்களைத் தொடர்ச்சியாக வினைத்திறனுடன் தமது உத்தம மட்ட சேவையை வழங்கவைக்கக் கூடிய ஓர் ஊக்க மருந்தாகும். நல்லதொரு அம்சமாகவுமே நான் கருதுகிறேன். ஒவ்வொரு இடமாற்றத்தின் போ தும் ஆசிரியர்கள் புத்துணர்ச்சி பெறுகின் றார்கள் என்பதாகவே நான் கருதுகின்றேன்.

ஒவ்வொரு ஆசி ரியர்களும் ஒவ்வொரு விதமான திறமைகளை யும், கற்பிக்கும் முறைகளையும் கொண்டி ருப்பார்கள். இடமாற்றம் என்பது சாத்தியமில் லாத போது அந்த திறமைகள் குறித்த ஒரு பாட சாலையிலேயே தங்கிவிடும். அப் பாடசாலை மாணவர்கள் மட்டுமே அந்த ஆசிரியரினால் பயன்பெற்று வருவார்கள்.சமூக சிந்தனையோடு நோக்கும் போது இது மாணவ சமூகத்திற்கு நல் லதல்ல. சகல மாணவர்களும் திறமையான ஆசிரியர்களினால் பயன்பெற வேண்டும். இது தான் சமூகத்திற்கு நல்லது. எனவே இடமாற்றம் மூலம் ஆசிரியர்கள் பல பாடசாலைகளில் தமது அறிவையும் அனுபவங்களையும் வெளிப்படுத்துவார்கள். இதன் மூலம் குறித்த ஒரு பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி ஏனைய பாடசாலை மாணவர்களும் வேறுபட்ட் கால கட்டங்களில் அந்த ஆசிரியர்களினால் நன்மையடைந்து கொள்வார்கள். எனவே அறிவும், திறமையும் குறித்த ஒரு இடத்தில் மட்டும் தங்கி விடாமல் பரஸ்பரம் பரிமாறப்பட இடமாற்றம் இன்றிமையாதது.

ஆசிரியர்கள் உருவாக்கப்பட்டது குறித்த பாடசாலைக்கு சேவையாற்றுவதற்காக அல்ல. சமூகத்திற்கு சேவை புரிவதற்காகவே. இதை ஆசிரியர்கள் உட்பட அனைவருமே அறிவர். எனவே வேறு பல பாடசாலைகளில் பணிபுரியும் போது தான் சமூக சேவை சாத்தியமாகின்றது. இடமாற்றத்தின் போதுதான் வேறு பால பாடசாலைகளில் பணிபுரிவது சாத்தியமாகின்றது. எனவே இடமாற்றத்தின் போது தான் வேறு பல பாடசாலைகளினால் தவறினால் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

இவ் இடமாற்றம் பராபட்சமின்றி இருக்க வேண்டும். மாறாக குறித்த ஆசிரியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பயன்படும் கருவியாக இருக்கக்கூடாது. இப்படி இருப்பின் மேற்குறித்த நியாயமும் அவசியமும் அர்த்தம் இல்லாமல் போய்விடும் என்பதே எனது தாழ்மையான கருத்து.

**தெ.ஹர்சன்**
**2-ஆம் வருட மாணவன்முகாமைத்துவ பீடம்**
**யாழ். பல்கலைக்கழகம்.**

## முதல் அமர்வு

## முரண்பாடான ஆசிரியருடன் தொடர்ந்திருந்தால் மாணவரின் கல்வி பாழாகும்

**ஏழு வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களின் இடமாற்றம் நியாயமானதும் அவசியமானதும் ஆகும்**

*மனமாற்றம் ஒன்று தேவையாயின் இட மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.* என்பது சகலரின் மனங்களிலும் ஏற்படுகின்ற பொதுவான கருத்தாகும். இக்கருத்து ஆசிரியர் மட்டத்தில் மிகவும் அவதானிக்கப்படவேண்டியதொன்றாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தொடர்ச்சியாக ஒரே பாட சாலையை எழுவருடங்கள் தாங்கிக்கொண்டிருப்பவர்கள் அதன் வளர்ச்சிப்பாதையினை தடைசெய்பவர்களாக மாறி விடுவார்கள்.

முரண்பாட்டுக்குரிய கொள்ளைகளைக் கொண்டவராக ஆசிரியர் காணப்படுமிடத்து மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் குழப்பமடைந்த நிலையில் பெற்றோரின் அதிருப்திக்கு உள்ளாவதோடு பாடசாலையின் வளர்ச்சியிலும் பாதிப்பை ஏற்படுத்திவிடும். இந் நிலைமாற வேண்டுமாயின் இடமாற்றம் ஒன்று அவசியமானதாகவே உள்ளது.

தொடர்ந்து ஒரே பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியரின் மன நிலையைப் பொறுத்தவரை மிகவும் இறுக்கமான கொள்ளைகளைக் கொண்டதாகவே இருக்கும்.தனக்கே இப்பாடசாலை சொந்தமானதாகவும் தன்னைப் பின்பற்றியே ஏனைய ஆசிரியரோ அன்றி அதிபரோ கடமை புரியவேண்டும் என்ற எண்ணமும் காணப்படும். உதாரணமாக ஒரு ஆசிரியர் நீண்ட காலமாக கற்பித்து வரும் நிலையில் ஒரு புதிய அதிபர் நியமனம் செய்யப்பட்டு அவர் புதிய சிந்தனைகளைச் செயற்படுமிடத்து அது அந்த ஆசிரியரால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக அமைந்துவிடின் ***இவர் என்ன இப்ப வந்தவர் இவருக்கு என்ன தெரியும் ?*** என்ற மன நிலையினை உருவாக்கி முரண்பாட்டிற்குரிய ஒரு ஆசிரியராக அவரைத் தோற்றுவிக்கின்ற நிலைமையும் உருவாகும்.இந்நிலை உருவாகாமல் தடுக்க இவ் இடமாற்றம் அவசியமானதே.

புதியதோர் சூழலில் ஒரு பாடசாலையில் கற்பித்தலை எதிர்கொள்வதற்காய் தன் கற்றலை இன்னும் மேம்படுத்துபவராகவும் தன்னை ஒரு நல்லாசிரியனாய் மிளிரச் செய்வதற்காய் இன்னும் பல புதிய கற்பித்தல் முறைகளைத் தேடுபவராகவும் விளங்குவார்.

இந்நிலையில் அப்பாடசாலையின் வளர்ச்சி துரிதகதியில் அபிவிருத்தி அடையும் .அத்தோடு பல ஆசிரிய நண்பர்களின் தொடர்பாடல் விருத்தியும் ஏற்படும். மாறாக ஒரே பாடசாலை தானே என்ற எண்ணத்தில் ஒரு குறுகிய தொடர்புக்குள் தன்னை வைத்துக் கொண்டு கற்பித்தலை மேற்கொள்கின்ற நிலை உருவாகும். தனக்கு வழங்கப்பட்ட கடமைக் கூறுகளை தனக்கே உரியதாக மட்டும் வைத்துக் கொ ண்டு பிறரிடம் விட்டுக் கொடுக்காது ஓய்வினைப் பெற்றுக் கொள்ளும் ஆசிரியர்களுக்காக வேனும் இவ் இட மாற்றம் அவசியமா னதும் நியாயமானதும் ஆகும்.

விடைத்தாள் மதிப்பீடு ஒரு ஆசிரியனை வினைத்திறனுடனான கற்பித்தலை மேற்கொள்ள வைக்கும். ஆனால் துரதிஸ்ட வசமாக தரம் 9 வரையுள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியருக்கு க.பொ.த. (சா/த) அன்றி உ/த விடைத்தாள் மதிப்பிடும் பணியில் கலந்து கொள்ளமுடியாது போகும்.

அத் தோடு வகுப்பு 9 ற்குரிய கற்பித்தல் முறைகளை மட்டும் உள்வாங்கி ஏனைய வகுப்பிற் குரிய கற்பித்தல் மாற்றங்களை அறியாதவராகவும் இருந்து விடுவார். தனக்கே ஒரு சுற்றுவட்டத்தை அமைத்து அதற்குள் உட்கார்ந்து கொண்டு விடுவார். இந்நிலை மாறி அவருக்குரிய கற்பித்தல் பகிர்வினை இடமாற்றம் ஒன்றை வழங்குவதன் மூலம் மட்டு மே ஏற்படுத்த முடியும். இதனால் ஆசிரியர்களுக்கிடையே ஏற்படுகின்ற தாழ்வுச் சிக்கல் நிலையினையும் மாற்ற முடியும்.



*நொந்தவனை நோகடிக்கின்ற* ஒரு செயலாக உள்ளது. கஸ்ரப்பிரதேச ஆசிரியரின் நிலைமை காரணம் கஸ்ரப்பிரதேச பாடசாலைக்குள் காலை ஊன்றியவர் அக்காலை வெளியே எடுப்பதற்கு மிகவும் கஸ்ரப்பட வேண்டியிருப்பது நோக்குதற்குரியது. இங்கு வீட்டிற்கு முன்னால் பாடசாலையைப் பெற்றவர்கள் அப் பாடசாலையிலேயே சேவையைத் தொடங்கி சேவையை தொடங்கி சேவையை முடித்துக்கொள்கின்ற அநாகரி கமான செயற்பாடுகளும் இவ் இடமாற்றத்தினால் நிறுத்தப்படுவது நோக்குதற்குரியது.

அத்தோடு சில பின் தள்ளப்படுகின்ற பாடசாலைகளில் பணிபுரிவோர் கல்வி நிர்வாக நடவடிக்கைகளில் கூடுதலாக ஈடுபடுவதன் மூலம் எதிர்காலத்தில் பதவி உயர்வு பெறுவதற்குரிய நிர்வாகக் கட்டமைப்பை அறிந்திருப்பர்.

ஆனால் பெரிய பாடசாலைகளில் அவ்வாறானதொரு நிலைமை ஆசிரியர்களுக்கு ஏற்படாத நிலையில் அவர்கள் நிர்வாகம் பற்றிய தொடர்பாடலில் நிறைவற்றவர்களாக காணப்படுவர். இதற்காகவேனும் இம் மாற்றம் அவசியமானதும் நியாயமானதுமாகும்.

காலம் பொன்னாது என்று அறிந்திருந்தும் இன்னும் ஆசிரியர்கள் மத்தியில் ***காலத்தை ஓடவிட்டு கடமைக்குச் செல்பவர்கள்*** வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் தொடர்ந்து ஒரே பாடசாலையில் கல்வி கற்பிப்பவராகவும் இருக்கின்ற நிலையில் ***கில வெடக்காய்*** என்கின்றநிலை உருவாகும். ஏனெனில் தொடர்ந்து ஒரே பாடசாலையில் கடமை புரிபவர் மூத்த ஆசிரியராகக் கருதப்படுவார். இந்நிலையில் அவர் 8.15 மணிக்கு ஆரம்பமாகும் பாடசாலைக்கு 8.30 ற்கே வருபவராக இருக்கின்ற நிலையில் அவரை மாற்ற எடுத்த முயற்சிகள் பயனளிக்காத நிலையில் அவர் தன் கொள்கையை இறுகப்பற்றிப் பிட்டதவராகிறார்.

இந்நிலையில் நேர முகா மைத்துவத்தில் இறுக்கம் கொண்டதான பாட சாலை இடமாற்றத்தின் மூலம் கிடைத்துவி டின் அவர் புதியதோர் சூழலுக்கு தன்னை மாற்றிக்கொள்ள வேண்டிய தேவைக்கு நிர்ப்பந்திக்கப்படுவார். எனவே இம் மாற்றம் அவசியமானதும் நியாயமானதும் ஆகும்.

எனவே ***உயிருள்ள ஜீவன்களுடன் உறவாடும்*** எம் ஆசிரியை இனம் எதிர்கால சமுதாயத்தின் எதிர்பார்ப்புக்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக தம்மை மாற்றிக் கொள்ள வேண்டிய தேவை உண்டு.

அத்தோடு மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் விருப்புடையதாக மாற்றப்பட வேண்டும்.

எனவே ஆசிரியர்களை ஒரே பாடசாலையில் தங்கவைத்து சிலருக்கு அனுகூலத்தையும் சிலருக்கு பிரதி கூலத்தையும் ஏற்படுத்தாது எல்லோரும் ஆசிரியர்களே என்ற நோக்கில் நோக்க வேண்டுமாயின் இவ்விடமாற்றம் அவசியமானதும் நியாயமானதும் ஆகும்.

இவ்வாறானதொரு எண்ணக்கருவை உதயமாக்கி அதனைச் செயற்படுத்த முனைகின்ற கல்வி சார் அதிகாரிகள் இவ் வேண்டுகையை ஏற்புடையதாக்கி செயற்படுத்த வேண்டும் எனவும் எனது கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

**திருமதி. வியவரதன்-சாந்தினி (ஆசிரியர்)**
**யா/ பத்தமேனி இரத்தினேஸ்வரி**
**வித்தியாலயம், அச்சுவேலி .**

## பாடசாலை மீது பற்றுக் கொண்ட ஆசிரியர்களே தேவை இடமாற்றம் அவசியமே இல்லை



ஓர் ஆசிரியர் குறித்த ஒரு பாடசாலையில் ஏழு வருடங்கள் கடமையாற்றுகின்றார் எனின் எவ்வளவு விருப்புடன் தொடர்ந்தும் அவர் அப் பாடசாலைக்குச் சேவை செய்ய விரும்புகின்றார் என்ற அவரது மன அவாவினை இதன் மூலம் நாம் கண்டுகொள்ளலாம்.


அவ்வாறானதோர் ஆசிரியரை இடமாற்றம் செய்வது எவ்வாறான வகையில் நியாயமானதும் அவசியமானதும் ஆகும்? அவ்வாறான (இட மாற்றம் செய்யும் எண்ணத்துடன் அவ்வாசிரியருக்கு மேல் மட்ட அதிகாரி ஒருவர் கட்டளையிட்டிருந்தால் அதுவே அநியாயமான செயலென நான் ஆணித்தரமாகக் கூறுகின்றேன்.

நானும் ஒரு மாணவன் என்ற ரீதியில் ஓர் ஆசிரியரின் விருப்புக்கள் என்ன என்பதையும் நான் அறிவேன். உலகிலேயேயுள்ள மகத்தான தொழில்களில் ஆசிரியத் தொழிலும் ஒன்றாகும். எந்தவோர் ஆசிரியரும் பேர் செல்லும் மாணவ பரம்பரையொன்றினை உருவாக்கி அதனால் தான் பெருமையடைய வேண்டுமென நினைப்பர்.அவ்வாறானதோர் ஆசிரியரின் கனவெல்லாம் நினைவாகும் வேளையிலே அவர் தனது கற்பித்தற் செயற்பாட்டினை மென்மேலும் விரிவுபடுத்திக் கொண்டு செல்வார்.

ஆனால் அவரை வேறோர் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யும் போது அவர் தனது கற்பித்தற் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் பல பிரச்சினைகள் உருவாகும். இதுவே உண்மை. உதாரணமாக மாணவரின் நிலையை அறிந்து கொள்ளுதல், அப் பாடசாலைச் சமூகத்தைப் பற்றி தெரிந்து கொள்ளல், மாணவர்களுக்கு எவ்வாறான முறையில் கற்பித்தல் எனப் பல பிரச்சினைகளை அவர் எதிர்நேர்க்க வேண்டிய சூழ்நிலை எற்படும்..... என்பதையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும். மேலும் ஒரு ஆசிரியருக்கு குறித்த பாடசாலையில் கல்வி கற்பிக்க விருப்பமில்லையாயின் அவர் ஏன் தொடர்ந்து ஏழு வருடங்கள் அப்பாடசாலையில் கற்பிக்க வேண்டும்? மூன்றோ நான்கோ வருடங்களில் அவரே இடமாற்றம் தேவையென மேலதிகாரிகளைகேட்டிருப்பரல்லவா.

எனவே தான் ஓர் ஆசிரியர் குறித்தவொரு பாடசாலையில் தொடர்ந்தும் ஏழு வருடங்கள் கல்வி கற்பிக்கின்றாரெனின் அவர் அப்பாட சாலைச் சமூகத்தில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கின்றார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறானதோர் ஆசிரியரை இட மாற்றம் செய்ய வேண்டுமென நாம் மனதளவில் நினைப்பதே அவசியமேயில்லாததும் நியாயப்படுத்த முடியாததுமான செயலாக அமையும்.

**சீவரத்தினம் தாரகன்**
**முத்துமாரி அம்மன் கோவிலடி,**
**அல்வாய் வடக்கு.**




(ஆ)மின்குமிழ் ஒன்றை இரவில் ஒளிரச் செய்யவும், பகலில் தன்னியக்கமாக ஒளிராமல் வைத்திருக்கவும் பயன்படும் இலத்திரனியல் சுற்று கீழே தரப்பட்டுள்ளது.

1-A, B, D ஆகிய உபகரணங்களின் பெயர்களைத் தருக?

2-மேலே தரப்பட்ட மின் சுற்றினை வரைந்து இரவில் மின்னோட்டம் செல்லும் பாதையை அம்புக்குறி மூலம் காட்டுக?

3- இச்சுற்றை பகலில் ஒளிரச் செய்ய நீர் செய்யும் மாற்றங்கள் எவை?

## அமைப்புக் கட்டுரை

(01) கடல் ஓர் இயற்கை வளமாகும். இதில் வாழும் உயிரினங்களாவன அல்காககள, பிளாத்தன்கள், மீனினங்கள், கடற்சிப்பி, கடல் அணிமனி, முருகைக்கல், விலங்குகள், நட்சத்திர மீன், கடற்சாதளை.

1- மேலே குறிப்பிட்டவற்றுள் நுண்ணங்கிகள் 02 ஐக் குறிப்பிடுக?

2- மேலே குறிப்பிட்டவற்றுள் தாவரம் ஒன்றும், விலங்கு ஒன்றும் தருக?

3- மீனிற்கும் மேலே குறிப்பிட்ட மற்றைய விலங்குகளிற்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் 02 ஐக் குறிப்பிடுக?

4- மேலே குறிப்பிட்டவற்றுள் ஆரைச் சமச்சீருடைய விலங்கு யாது?

5- மேலே குறிப்பிட்ட எவ் விலங்கின் புறவன்கூடு மீன்கள் இனம் பெருகுவதற்கு உதவுகிறது?

6- மேலே குறிப்பிட்ட புறவன்கூட்டில் காணப்படும் இரசாயனச் சேர்வையின் சூத்திரத்தை தருக?

7- அவ் இராசாயனப் பொருளை வெப்பமேற்றும் போது நடைபெறும் இரசாயனச் சமன்பாட்டை எழுதுக?

8- நீர் எழுதிய சமன்பாட்டில் 100g இர்சாயனப் பொருளிலிருந்து வெளியேறும் வாயுவின் திணிவைக் கணிக்க?

(Ca - 40 C - 12 O = 16 )

9- உருவாகும் திண்ம விளைபொருளின் பயன்கள் 02 தருக?

10-கடலை சக்தி வளம் புதுப்பிக்க கூடிய சக்தி வளமாகும். இதிலிருந்து உற்பத்தி செய்யக் கூடிய சக்தி யாது?

11-புதுப்பிக்கக் கூடிய சக்தி வளம் என்பதால் கருதப்படுவது என்ன? புதுப்பிக்கக்கூடிய சக்தி வளத்திற்கு வேறு உதாரணங்கள் 02 தருக?

12-கடலினுள் புவி நடுக்கம் ஏற்படும்போது உருவாகக் கூடிய ஆபத்தான அலை வகை எது?

13-மின் காந்த அலைக்கும் மேற்கூறப்பட்ட அலைக்கும் இடையிலுள்ள ஒற்றுமை ஒன்று, வேற்றுமை ஒன்று தருக?

14-சமுத்திரங்களில் ஆழத்தை அறிய சோனர் கருவி பயன்படும். இக் கருவியின் மூலம் பிறப்பிக்கப்பட்ட கழி ஒலியின் எதிரொலி 0.5 செக்கன்களில் உணரப்பட்டது எனின், கடலின் ஆழம் யாது? (நீரில் ஒலியின் வேகம் 1,400 m/s )

(02) சில கலங்கள், இழையங்களின் படங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

படம்(அ) படம்(ஆ) படம்(இ)




இரன்வியரின் கணு இலைவாய்


(அ) 1- படங்கள் அ, ஆ, இ ஆகியவற்றை இனம் காண்க?

2- A, B. C, D, E, F எனக்குறிக்கப்பட்ட பகுதிகளின் பெயர்களைத் தருக?

3- A, B ஆகிய பகுதிகளின் தொழில்களைத் தருக?

4- படம் (ஆ) இல் உள்ள இழையம் காணப்படும் இடங்கள் 02 தருக?

(ஆ)




தாவர இலையொன்றின் குறுக்கு வெட்டுமுகம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.


1- P, Q, R, S ஆகியவற்றின் பெயர்களைத் தருக?

2- இத்தாவரம் வளரும் சூழல் நிலைமை எத்தகையது?

3- வளரும் சூழல் நிலைமைக்கு பொருத்தமாக இத்தாவரம் கொண்டுள்ள இசைவாக்கம் படத்தில் காட்டப்பட்டுள்ளது. அவ் இசைவாக்கத்தைத் தருக?

4- மேலே நீர் கூறிய இசைவாக்கத்தைக் கொண்டுள்ள தாவரங்கள் 02 தருக?

(03) (அ) தாக்கவீதம் தொடர்பான பிரசோதனை படத்தில் காட்டப்பட்டுள்ளது.




1- தாக்க வீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

2- தாக்கமொன்றின் தாக்கவீதம் துணியப்படும் முறை ஒன்று தருக?

3- இப்பரிசோதனையில் தாக்க வீதத்தை பாதிக்கும் எக்காரணி பற்றி அறியப்படுகிறது?

4- மேலே தரப்பட்ட பரிசோதனையில் உமது அவதானங்களைத் தருக?

5- தாக்க வீதத்தில் தாக்கிகளின் பௌதீகநிலை பற்றி அறிவதற்காக இவ் அமைப்பை எவ்வாறு மாற்றியமைப்பீர் எனக்கூறுக?

(ஆ) இங்கு நிகழும் தாக்க சமன்பாட்டைத் தருக.

(இ) சுண்ணாம்புக் கல்லை வெப்பமேற்றுவதன் மூலம் சுட்ட சுண்ணாம்பு பெறப்படுகிறது.

1- சுண்ணாம்புக் கல்லிலுள்ள சேர்வையின் பெயரை தருக?


2- இச்சேர்வையின் மூலர்திணிவைக் காண்க?

3- சுண்ணாம்புக் கல்லின் பயன்கள் 02 தருக?

4- சுட்ட சுண்ணாம்பிற்கு நீரைச் சேர்ப்பதன் மூலம் நீறிய சுண்ணாம்பு பெறப்படும் இத்தாக்கம் அகவெப்ப தாக்கமா / புறவெப்ப தாக்கமா?

5- வெளிற்றும் தூள் தயாரிப்பில் நீறிய சுண்ணாம்பு பயன்படுத்தப்படும். வெளிற்றும் தூளில் உள்ள 02 சேர்வைகளின் சூத்திரங்களைத் தருக.

(04)




(அ) குழாய் கிணற்றிலுள்ள நீரை வெளியே எடுப்பதற்கு பயன்படுத்தப்படும் பம்பி ஒன்று காட்டப்பட்டுள்ளது.

1- கோல் A, B, C எவ்வகை நெம்புப் பொறியாகும்?

2- இந்நெம்பில் எத்தனம், சுமை, சுழலிடம் ஆகியவற்றை குறிக்க?

3- இவ்வகை நெம்புப் பொறிக்கு வேறொரு உதாரணம்தருக?

4- இவ்வகை நெம்பின் பொறிமுறை நயம் பற்றி என்ன கூறலாம்?

5-இப்பம்பியில் வால்வுகளின் தொழிற்பாட்டை விளக்குக?

6-AB = .25 cm AC = 100 cm எனின் நெம்பின் வேக விகிதம் என்ன?


7-A, B ஆகிய இடங்களில் உராய்வை குறைக்க செய்யப்படும் உத்தி மூன்று தருக?

8-நெம்பில் உராய்வு இல்லை எனக்கொண்டு C இல் 20 N எத்தனத்தை கொடுக்கும்போது B இல் தொழிற்படும் விசையை காண்க?

9-C இல் கீழ் நோக்கி விசையை பிரயோகிக்கும் போது X, Y ஆகியவற்றில் எந்த வால்பு திறக்கும்?

10-முசலத்தின் பரப்பளவு 100 $cm^2$ ஆகும். 20 N எத்தனத்தை பிரயோகிப்பதன் மூலம் முசலத்தை கீழ்நோக்கி அசைக்கும் போது முசலத்தினால் உண்டாகும் அமுக்கத்தைக் காண்க?

(ஆ)1500 W பெறுமானமுடைய வெப்பத்தட்டு இங்கு தரப்பட்டுள்ளது.




1- சுருள் எவ் உலோகத்தினால் ஆனது?

2- இவ் உலோகத்திலுள்ள கூறுகள் எவை?

3- இவ் உலோகத்தை பயன்படுத்து வதற்கு காரணமான இதன் இயல்புகள் 02 தருக?

4- சுருளில் அதிகளவு வெப்பத்தை பிறப்பிப்பதற்காக செய்யப்பட்டுள்ள உத்திகள் 02 தருக?

5- கம்பியின் கு. வெ. மு. 1 $mm^2$, நீளம் 10 m உலோகத்தின் தடைத்திறன் $100 X 10^{-8}$ ஓம் m எனின இச்சுருளின் தடையை காண்க?

6- A மின்னோட்டம் 5 நிமிடங்களுக்கு சுருளினூடாக பாயும் போது பிறப்பிக்கப்படும் வெப்பத்தைக் காண்க?

# இன்று ஒரு தகவல்

## தடைக்கல்லும் படிக்கல்லாகும்

"வாழ்க்கையில் முன்னேற வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார் ஒருவர்.

"வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால்... கடுமையாக உழைக்க வேண்டும். அதுதான் வழி "என்றார் மற்றவர்.

நமக்கும் அதுதான் சரியென்று தோன்றுகிறது. ஆனால் நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?" வாழ்க்கையில் முன்னேற கடின உழைப்பு முக்கியமில்லை. சில நேரங்களில் சூழ்நிலைக்குத் தகுந்தாற் போல் திடீரென எடுக்கும் முடிவுகள் தான் முக்கியம் "என்கிறார்கள்.

அதற்கு உதாரணமாக சில நிகழ்வுகளையும் சொல்கிறார்கள்.

ஓர் ஊரில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அங்கு படித்த ஒரு மாணவனுக்கு படிப்பு சரியாக ஏறவில்லை. பரீட்சை வந்தது. ஒரு பாடத்தில் கூட அவன் பாஸாகவில்லை. இதனால் அந்தப் பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியருக்கு கோபம் வந்துவிட்டது.

அவர் சத்தம் போட்டார்.

"இதோ பாரப்பா... இந்தப் பள்ளிக்கூடத்தில் 10 வருஷமாக நீ படித்துக் கொண்டிருக்கிறாய். அப்படியிருந்தும் ஒரு பாடத்தில் கூட பாஸாகவில்லை.

எல்லாவற்றிலும் பெயிலாகிவிட்டாய். ஏனப்பா... ஆசிரியர்கள் பாடம் நடத்தும் போது... அது உன் காதிலே விழாதா? நீ என்ன காதிலே பஞ்சா வைத்து அடைத்திருக்கிறாய் "என்றார்.

இதற்கு இந்தப் பையன் பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

அவர் பார்த்தார்.

"இனிமேல் நீ இந்தப் பள்ளிக்கூடத்தில் படிப்பதை அனுமதிக்க முடியாது. உனக்கு எதுவும் சரியாக வராது. பேசாமல் வெளியில் போய்விடு. இந்தா உன்னுடைய விலகல் சான்றிதழ்" என்று அதைக் கையில் கொடுத்து அனுப்பி வைத்துவிட்டார்.

வேறு வழியில்லாமல் அந்தப் பையன் அதை வாங்கிக் கொண்டு வெளியில் வந்தான். தெருவில் இறங்கி நடந்தான்.

ஆசிரியர் சொன்னது மட்டும் அவன் காதில் கேட்டது. "உன் காதில் என்ன பஞ்சா வைத்திருக்கிறாய்? என்று சொன்னார் அல்லவா! "அது திரும்பத் திரும்ப மனதில் எதிரொலித்தது.

உடனே தன் இரண்டு கைகளாலும் இரண்டு காதுகளையும் அழுத்தமாக மூடிக்கொண்டான். அவனுக்கு அது வித்தியாசமாகத் தெரிந்தது.

வெளிச்சத்தம் எதுவும் காதில் விழவில்லை. அமைதியாக இருந்தது.

அப்படியே யோசிக்க ஆரம்பித்தான். ஒரு புதிய சிந்தனை உருவானது.

காதை அடைப்பதற்கு ஏதாவது ஒரு வசதியை ஏற்படுத்தினால் என்னவென்று யோசித்தான். சிறிது பஞ்சு எடுத்து அடைசிப் பார்த்தான். சரியாக வந்தது. அதைக் கொண்டு ஒரு சாதனத்தை வடிவமைத்தான். அதுதான் இயர் மஃப் (Ear Muff)

கடைகளில் கொண்டுபோய்க் கொடுத்தான். மக்கள் வாங்க ஆரம்பித்தார்கள்.

பரீட்சைக்குப் படிக்கும் பிள்ளைகள் தொந்தரவு இல்லாமல் படிப்பதற்கும், தீயணைப்பு வீரர்கள் இரைச்சல் பகுதிகளில் வேலை செய்யும் போது பாவிப்பதற்கும் அதை வாங்கினார்கள்.

ஓரளவுக்கு வியாபாரம் நடந்தது.

அந்தக் காலகட்டத்தில் தான் உலகப் போர் ஆரம்பமானது. அந்தச் சமயத்தில் போர்வீரர்களுக்கு பீரங்கி சத்தத்தினாலும் துப்பாக்கி சத்தத்தினாலும் காது கேட்காமல் போய்விடுவதுண்டு.

அதனால் அவர்களுக்கெல்லாம் கட்டாயமாக இயர் மஃப் கொடுக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

அதனால் போர்வீரர்களுக்கு இயர் மஃப்பை தயாரித்து வழங்குவதற்கான ஓடர் கிடைத்தது. போர் வீரர்களுக்கு வசதியாக ஹெல்மட்டில் இயர் மஃப்பை வடிவமைத்துக் கொடுத்தான். அது மிகவும் உபயோகமாக இருந்தது.

அதன் விளைவு அந்த இளைஞன் பெரிய கோடீஸ்வரனானான். அவர் தான் செஸ்டர் கிரீன்வுட். அவர் அப்படி ஆனதற்குக் காரணம் என்ன? சரியான சூழ்நிலையில் கிடைத்த ஐடியாவை சரியானமுறையில் பயன்படுத்திக்கொண்டார். அவ்வளவுதான்! நம்மில் பலர் அப்படி முடிவெடுப்பதில்லை. வேறு மாதிரி முடிவெடுக்கிறோம். ஒரு ஆசிரியர் மாணவனைத் திட்டினார்.

"இதோ பாரப்பா... நீ எல்லாப் பாடத்திலும் பெயில். இப்படியிருந்தால் உனக்கு என்ன உத்தியோகம் கிடைக்கும்? மாடு மேய்ப்பதற்கு கூட லாயக்கில்லை" என்றார்.

" பரவாயில்லை சேர்... உங்களை மாதிரி ஒரு ஆசிரியர் உத்தியோகம் கிடைத்தாலும் போதும்" என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# உலக கைகழுவுதல் தினத்தை முன்னிட்டு

## வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட போட்டி முடிபுகள்

உலக கைகழுவுதல் தினத்தை முன்னிட்டு வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட சுவரொட்டி போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்று பரிசில் பெறும் மாணவர்கள் மற்றும் சான்றிதழ் பெறும் மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**பரிசில் பெறுவோர்**

முதலாம் இடம்:-ஆர்.விதுர்ஷா (நெல்லியடி மத்திய மகாவித்தி.), இரண்டாம் இடம் :- ஈ.கஜனராஜ் (பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தி.), மூன்றாம் இடம்:-பி.அனுர்ாகன் (தேவரையாளி இந்துக்கல்லூரி).

**சான்றிதழ் பெறுவோர்**

த.பிரணவன்(ஹாட்லிக்கல்லூரி), தே.சத்தியா(விக்னேஸ்வராக் கல்லூரி),சே.நிஷாந்தன்(உடுப்பிட்டி அ.மி.கல்லூரி),றோ.யக்சன் (கலட்டி றோ.க.த.க.பாடசாலை), க.சோபிதா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), இ.பிரியங்கா( மெதடிஸ்த பெ.உ. பாடசாலை), மு.விமலலோசிகா (ஞானாசிரியர் கல்லூரி), க.சிவதுசன் (கரணவாய் மகாவித்தி),வி.கௌரிகரன் (கரணவாய் மகா வித்தி.), பி.பிரவீன் (வேலாயுதம் மகா வித்தி.), அ.ஜீவராஜ் (தொண்டைமானாறு வீ.ம.வித்தி), வி. ஹேலி மஸ்ராஜ்( பொலிகண்டி அ.த.க.பாட சாலை), ம.கார்த்தீபன் (அல்வாய் ஸ்ரீலங்கா வித்தி.), சி. தமயந்தன் (வல்வெட்டி இ.த.க.பாட சாலை) (6-4-19)

# யுத்த வெற்றியாளர் யார் என்பதனை சிங்கள மக்களே தீர்மானிக்க வேண்டும்

## சிவாஜிலிங்கம் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த வெற்றியாளர் யார் என்பதனை சிங்கள மக்களே தீர்மானிக்கவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.


யுத்த வெற்றி தொடர்பில் முக்கிய பங்காற்றியவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவா அல்லது ஜெனரல் சரத்பொன்சேகவா என்பது குறித்துசிங்கள மக்களே சரியான தீர்மானங்களை எடுக்கவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரிசி, மா, பருப்பு உள்ளிட்ட பொருட்கள் மட்டுமே கிடைக்கப்பெறுவதாகவும் மரக்கறி வகைகள், மீன்போன்ற வற்றை தாம் நீண்டகாலமாகக் காணவில்லையென இடம்பெயர் மக்கள் முறைப்பாடு செய்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிரபல சிங்கள வார இறுதிப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். குழந்தைகளுக்கான பால்மா உரிய முறையில் விநியோகம் செய்யப்படுவதில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உரியமுறையில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட வேண்டியது அவசியமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழர்களுக்கு தீர்வுத்திட்டங்களை வழங்குவது தொடர்பில் அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என அவர்குறிப்பிட்டுள்ளார்.

தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்படாத வரையில் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க முடியாதென அவர் தெரிவித்துள்ளார். (6)



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கந்த சஷ்டி விரத உற்சவ காலங்களில் சுதுமலை கிழக்கு ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெற்ற இந்துசமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு சைவப் புலவர் நித்திய தசீதரன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

23.11.2009
(கார்த்திகை 7 திங்கட்கிழமை)
சஷ்டி முற்பகல் 9.45 மணிவரை
திருவோணம் மாலை 6.57 மணிவரை
இராகுகாலம் 7.41-9.11 மணிவரை
சுபநேரம் 12.11-1.41 மணிவரை
கார்த்திகை முதலாம் சோமவாரம்
அமிர்தசித்தம், சாயிபாபா பிறந்த தினம்

| | |
|---|---|
| மேடம் | சுபநிகழ்வு, பிறர் உதவி, காரிய நன்மை, போசனசுகம். |
| இடபம் | ஆன்றோர் சந்திப்பு, சரீரப் பிரயாசை, அச்சமான நிலை, திடீர் பயணம். |
| மிதுனம் | எதிர்பாராத அச்சம், மரியாதைக் குறைவு, வேலைச்சுமை, போசன சுகம். |
| கடகம் | எடுத்தகாரியம் கைகூடும், திடீர் பயணம், நண்பர்கள் சந்திப்பு, குடும்ப சுகம். |
| சிங்கம் | பணவருவாய், சத்துரு ஜெயம், செய்தொழில் விருத்தி, முயற்சி கைகூடும். |
| கன்னி | சிறுவியாதி, தொழில்நன்மை, குடும்பக்கவலை, பணக்குறைவு. |
| துலாம் | பயந்தசுபாவம், தொழில் சிந்தை, உடல் நலக்குறைவு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | சகோதரர் உதவி, வாக்கு மேன்மை, காரிய அனுகூலம், தனவருவாய். |
| தனுசு | விவாதம், தொழில் மந்தநிலை, சயனசுகக்குறைவு, தனவிரயம். |
| மகரம் | நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, தேகநலன், போசன சுகம். |
| கும்பம் | பிரயாணம், புதிய திருப்பம், சயன சுகக்குறைவு, மனச்சஞ்சலம். |
| மீனம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், கலந்துரையாடல், போசனசுகம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 180 | 150 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 |
| தக்காளி | 90 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 70 | 80 | 60 |
| கரட் | 70 | 80 | 80 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 60 | 80 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 110 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 90 | 100 | 60 |
| லீக்ஸ் | 220 | 240 | 140 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 50 | 60 | 80 |
| கீரை - 1 பிடி | 25 | 30 | 25 |
| தேசிக்காய் | 200 | 220 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 25 |

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 2 விதி எண் : 5

### உடலமைப்பு

பிறந்த எண் 2, விதி எண் 5 ஆக உள்ளவர்கள் சந்திரன், புதனின் கூட்டு ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள் இருவரும் சுபர் என்ற அந்தஸ்தைப் பெற்றவர். இவர்கள் நடுத்தர உயரமானவர்களாக இருப்பர், உடல் சற்று மெலிந்திருக்கும் .அழகும், கவர்ச்சியும் மிக்கவராக இருப்பர்.

### மன, குணவியல்பு

இவர்கள் அறிவு விசாலமானவர் .இலட்சிய வாதிகளாக இருப்பர். தன்னைப் போன்று தன்னைச் சார்ந்தவர்களையும் உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற ஓர் உயர்ந்த நோக்குள்ளவர்கள். அதற்காக பாடுபடவும் செய்வர். இருந்தாலும் முன் எச்சரிக்கையானவர்கள். ஆழம் தெரியாமல் காலை விடமாட்டார்கள்.

இவர்கள் கோழையாக இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளமாட்டார்கள்.தாங்கள் மனபலம் கொண்டவர்போல பேசி மற்றவர்களிடம் காரிய சாதனை புரிவர். இருந்தாலும் இவர்கள் இளகிய மனம் கொண்டவர்களாகவும், மற்றவர்களுக்கு உதவும் நல்ல போக்குள்ளவர்களாகவும் இருப்பர். ஆனால் சொன்னதையே திரும்பச் சொல்லி எரிச்சலைத் தூண்டுவர்.

இவர்கள் பொறுமைக்கும் அடக்கத்திற்கும் உறைவிடமாகத் திகழ்வர். ஆனால் சில நேரங்களில் அதிகமான கோபத்திற்கு ஆளாகி கடுமையாகப் பேசிவிடுவர். இருப்பினும் எவரையும் கெடுக்கும் எண்ணம் கொஞ்சமும் இல்லாதவர்கள்.

இவர்கள் தங்களுக்கு தெரிந்தது கொஞ்சம் என்றாலும் எல்லாம் தெரிந்தவர் போல வெளிக்குக் காட்டிக்கொள்வர். அதனால் பிறர் தம்மை மதிக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பார். பிறரைக் கவரும் வண்ணம் ஆடை அலங்காரம் புரிந்துகொள்வர். காமவெறி மிக்கவர்களாக இருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவருக்கு மனத்திற்கும் குடும்பத்திற்கும் பொருத்தமான வாழ்க்கைத் துணை சுலபமாகவே அமைந்து விடும். இவர்களின் குடும்பத்தில் பிரச்சினைகள் மிகக் குறைந்தே காணப்படும். உற்றார் உறவினர்களின் போக்கும் சுமூகமாகவே இருக்கும்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் அரசுத் துறையிலோ தனியாரிடமோ பணி புரிபவராயிருந்தாலும் சொந்தத் தொழிலில்தான் அதிக கவனம் செலுத்துவர். வண்டி, வாகனம் போக்குவரத்துத் துறைகளில் தொழில் புரிவர். விவசாயம் மற்றும் பச்சை நிறப்பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், மின்சாரப் பொருட்கள் போன்றவற்றை விற்பவராகவோ விற்பனைக் கூடத்தில் பணிபுரிபவராகவோ இருப்பர். அது தொடர்பான காண்ட்ராக்ட் கமிஷன் ஏஜண்டாகவும் பணிபுரிவர்.

பொருளாதாரத்துறையில் படிப்படியாக முன்னேறி அதிகமாக பொருளும் சொத்தும் சேர்க்கும் வாய்ப்பு உண்டு.

### ஆரோக்கிய நிலை

இவர்கள் நரம்பு பலவீனமானவர்கள் அதனால் நரம்பு சம்பந்த நோய்களும் , முதுகுவலி ,மூட்டுவலி போன்றனவும் உண்டாகும். பல்வலி, பல் சொத்தை ஏற்படுதல் கூடும். இவர்களுக்கு சித்தப்பிரமை ஏற்படவும் வாய்ப்புண்டு.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் புதன் ஆதிக்கம் பெற்ற 5 சுக்கிரன் ஆதிக்கம் பெற்ற 6 எண்களின் தொடர்புள்ளவற்றில் தம் பெயரை மாற்றிக் கொள்ளலாம். தம் நிறுவனங்களுக்கும் இவ்வாறு பெயர் வைக்க அதிர்ஷ்டமாகும்.

இவர்களுக்கு 5, 6, 7 யோகமான எண்களாகவும் அது தொடர்புடைய திகதிகள் யோகமான திகதிகள் என்றும் பொதுவாகக் கூறலாம்.

ஆனால் செவ்வாய் ஆதிக்கம் பெற்ற 8ஆம் அது தொடர்புடைய எண்கள், திகதிகளும் அனுகூலமற்றவை.

## உடல் எண் : 2 விதி எண் : 6

### உடலமைப்பு

பிறந்த எண்2,விதி எண் 6 ஆகக் கொண்டவர்கள் சந்திரன்,சுக்கிரன் ஆதிக்கத்திற்குட்பட்டவர்களாகவர். இவர்கள் நடுத்தர உயரமான வர்களாக இருப்பர். முகம் கவர்ச்சியுடன் காணப்படும். இவர்களின் பேச்சும் இனிமையாகப் பிறரைக் கவரும் வண்ணம் இருக்கும். இவர்களின் நடையும் தனித்தன்மை பொருந்தியதாக இருக்கும்.

### மன,குணவியல்பு

இவர்கள் எப்போதும் பிறர் மனதை ஈர்க்கும் படியாக உடை உடுத்துவர். இவர்கள் காரியவாதிகளாக இருப்பர். தனக்கு ஆதாயம் இல்லாத எந்தச் செயலையும் செய்ய மாட்டார்கள். கஷ்டம் அதிகம் இன்றி சுலபமாக சம்பாதிக்கும் வழி என்ன என்பதிலேயே கருத்தாக இருப்பர். இவர்கள் தற்புகழ்ச்சிக்கு ஆளானவர்களாக இருப்பர். தம்மை யாராவது புகழ்ந்து விட்டால் மயங்கி விடுவர். அவர்களுக்கு வேண்டியதை செய்வர். அவரிடம் உள்ள குற்றத்தைச் சுட்டிக்காட்டி விட்டால் துள்ளிக் குதிப்பார். அவர்களை வெறுத்து ஒதுக்குவார். தன் தவறை உணரவோ தன்னைத் திருத்திக்கொள்ளவோ விரும்பமாட்டார்கள். இவர்கள் எப்போதும் சலன புத்தியுள்ளவர்களாக இருப்பர். ஒரு சமயம் இருப்பது போன்று மறு சமயம் இருக்க மாட்டார்கள். இருந்தாலும் இந்த உலகத்தில் உள்ள இன்பமனைத்தையும் அனுபவித்து விட வேண்டும் என்ற துடிப்பு மிக்கவராக இருப்பர். இவர்கள் அனைவரிடமும் பழகி விடமாட்டார்கள். குறிப்பிட்ட சிலரே நண்பர்களாக இருப்பர். இவர்களிடம் கெட்ட பழக்கம் ஏதேனும் குடி கொண்டிருக்கும்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு வாழ்க்கைத் துணை நல்லவராக அமைவர். அவர்களால் ஆதாயம் பெறுவர். அந்த அளவுக்கு அதிஷ்டமுள்ளவர் அமைவர். இருந்தாலும் பெண்கள் இவர்களுக்கு விரோதிகளாகவும் கலகம் புரிந்து குழப்பத்தை விளைவிப்பவராகவும் இருப்பர். அதனால் அமைதி கெட நேரிடும்.

### தொழிலும் வருமானமும்

இவர்களிடம் கலையார்வம் இயற்கையாகவே இருக்கும். பேச்சாற்றல் ,எழுத்தாற்றல் மிக்கவராகவும் அது தொடர்பான தொழில்களைப் புரிபவராகவும் இருப்பர். இவர்களுக்கு பச்சை நிறம் தொடர்பான விவசாயம் மற்றும் காய்கறிகள் பயிரிடுதல் விற்பனை செய்தல் போன்றன ஏற்றவை.

அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியக்கூடும். கூட்டுத்தொழில் இவர்களுக்கு நன்மை தரும். கமிசன் மண்டி வைத்தல் ,கன்ட்ராக்ட் எடுத்தல் மூலம் ஆதாயம் பெறுவர். ஆடம்பரப் பொருள் மற்றும் பெண்களுக்கு உபயோகமாகும் பொருள்களைத் தயாரித்தலோ விற்பனை செய்தலோ இலாபம் தரும். இவர்கள் எந்தத்தொழிலைச் செய்பவர்களாக இருந்தாலும் அதிக உழைப்பும் கஷ்டமுமின்றி இலாபம் சம்பாதிப்பவராக இருப்பர். பொருளாதாரத்துறையில் மேன்மையும் சொத்துச்சேர்க்கையும் பெற வாய்ப்புண்டு.

### ஆரோக்கிய நிலை

இவர்கள் கண்கள் தொடர்பான நோய்க்கு ஆளாகக்கூடும். வயிற்றுவலியும் ஏற்படலாம். சித்தம் கலங்கும். அதனால் சித்தப் பிரமை ஏற்படுதலும் கூடும்.

### சாதக,பாதக எண்களும் , திகதியும்

இவர்கள் சுக்கிரன் ஆதிக்க எண்ணான 6 இலேயே அதிஷ்ட பலன் தரும் எண்ணில் பெயரை வைத்துக்கொள்ள முன்னேற்றமாக இருக்கும். தம் நிறுவனங்களுக்குக்கூட 6 தொடர்புடைய பெயரே சிறந்தது. இவர்களுக்கு 6,7 எண்கள் அது தொடர்பான திகதிகள் கூட அதிஷ்டமானவை. ஆனால் செவ்வாய் ஆதிக்கத்திற்குட்பட்ட 8ம் அது தொடர்பான எண்களும் அதிர்ஷ்டமில்லாதவை. (தொடரும்)

## நடமாடும் சேவை

காரைநகரில் மீளக்குடியமர்ந்தவர்களின் நன்மை கருதி ஊர்காவற்றுறைப் பொலிஸார் நடமாடும் சேவை ஒன்றினை கடந்த வியாழக்கிழமை நடத்தியுள்ளனர்.

காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் ஆ.சத்தியமூர்த்தியின் தலைமையில் நடைபெற்ற இந் நடமாடும் சேவையில் ஊர்காவற்றுறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரவி டானியல் தலைமையிலான பொலிஸ் குழுவினர் கலந்து கொண்டு இவ் நடமாடும் சேவையை வழங்கினர். இந்நடமாடும் சேவையில் அடையாள அட்டை தொலைந்தவர்களில் 168 பேர்களின் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு பற்றுச்சீட்டுகள் வழங்கப்பட்டன. (ஓ-246)

## ஐ.தே.க.வின் தேசிய மாநாட்டில் பொதுவேட்பாளர் அறிவிக்கப்படுவார்

### திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

கொழும்பில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் வாரத்தில் நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் விசேட தேசிய மாநாட்டின் போது ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் எதிர்க்கட்சியின் பொதுவேட்பாளர் யார் என்பது பற்றி தெரியவரும் என ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலுக்காக எமது கட்சியினால் நிறுத்தப்படவுள்ள பொதுவேட்பாளர் தொடர்பில் அன்றைய தினம் நாட்டு மக்களுக்கு அறிவிப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக்கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ள எமது விசேட தேசிய மாநாட்டிற்கு எதிர்க்கட்சியின் பொதுவேட்பாளர் சமூகமளிப்பார் என்றும் அன்றைய தினம் ஐக்கிய தேசிய முன்னணியுடன் அவர் செய்து கொண்டுள்ள இணக்கப்பாடுகள் பற்றி உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியுடன் இதுவரை 16 அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இணைந்துள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில் மேலும் பல அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இணைந்துகொள்ள தமது விரும்பங்களைத் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்ட திஸ்ஸ அத்தநாயக்க இவர்கள் அனைவரும் தேசிய மாநாட்டிற்கு அழைக்கப்படுவர் என்றும் தெரிவித்தார்.

எமது தேசிய மாநாட்டின் போது பொதுவேட்பாளர் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் தற்போது ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக விசேட உரை ஒன்றையும் ஆற்றுவார்.

இதே அவரது எதிர்காலத் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்தும் இங்கு அறிவிக்கப்படும். அத்துடன் நியமனம் இடம்பெற்றதன் பின்பு தேசிய மாநாட்டில் இருந்தே அபேட்சகரது ஜனாதிபதித்தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு ஐ.தே.க. முன்னணி தீர்மானித்துள்ளதாகவும் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் குறிப்பிட்டார். (6)





மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலய பரிசளிப்பு விழா மற்றும் கட்டடத்திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்ப்பாணம் பாடசாலைகள் கட்டடவேலைப்பகுதி பொறியியலாளர் கு.சிவபாலன் ,சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி கோட்டக்கல்விப்பணிப்பாளர் கு.சிவானந்தம்,கௌரவ விருந்தினர்களாக கலந்துகொண்ட தென் மராட்சி ஆரம்பக்கல்வி முதன்மை ஆசிரியர்களான திருமதி.இ.பாலசுப்பிரமணியம்,அ.மனோரஞ்சிதன் மற்றும் வித்தியாலய முதல்வர் திருமதி வ.வைகுந்தநாதன் ஆகியோர் அழைத்துவரப்படுவதையும்,மாணவிகளின் வரவேற்பு நடனத்தையும் படங்களில் காணலாம்.

ஆத்தாள் படுகிற பாட்டில குத்தியன்
பாலுக்கு அழுதானாம்.

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி

## வீசுகின்ற தேர்தல் காற்றில் அள்ளுண்டு போகாதீர்

வன்னி யுத்தம் முடிந்தும் முகாம் வாழ்க்கை முற்றுப் பெறவில்லை. தமிழர்கள் என்ற பெயரால் அவர்களுக்கு இந்த நாடு விதித்த தண்டனை அது.

தற்போது முகாம் வாழ்க்கையில் இருந்து ஒரு பகுதியினர் மீண்டுள்ளனர். பெரும்பகுதியினருக்கு முகாம் வாழ்க்கையில் இருந்து விடுதலை பெறும் காலம் இன்னமும் வரவில்லைப் போலும்.

இதற்கு மேலாக மீள் குடியமர்ந்தவர்களின் அவல நிலையை பகிரங்கப்படுத்த எவரும் முன்வராத நிலையில், அவர்களின் துன்ப துயரங்களும் நீடிக்கின்றன.

இருப்பதற்கு வீடில்லை; தளபாடம் இல்லை; வசதிகள் எதுவுமில்லை; யாரிடம் முறையிடுவது; ஏதோ முகாமைவிட்டு வெளியேறிய நிம்மதியொன்றைத் தவிர வேறு எதுவும் இல்லை.

மீளக் குடியமர்வுக்கு இருபத்தையாயிரம் ரூபாய். அதனை இப்போது ஐம்பது ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளதாகத் தகவல்.

இது தமிழர்களுக்கானது. குண்டு வெடிப்பில் சிங்களவர் ஒருவர் காயப்பட்டிருந்தால் அதற்கான கொடுப்பனவும் ஐம்பதாயிரம் ரூபாய் தான்.

அதேநேரம் உறவிழுந்து, சொத்திழுந்து, நிம்மதி எல்லாம் இழந்து எதியோப்பியாவை–சோமாலியாவை நினைவுபடுத்தும் கோலத்தில் வந்த தமிழ் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கும் ஐம்பதாயிரம் தான்.

எப்படி இருக்கிறது எங்கள் நிலை?

நாடு கேட்ட தமிழர்களுக்கு தனி நாடு கிடைக்கவில்லை. ஆயினும் வேற்று நாட்டவர்கள் போல் நடத்தப்படுவது தான் எங்கள் உரிமையாயிற்று.

நிலைமை இதுவாக இருக்கையில்தான் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் முயற்சி வெற்றியளித்ததாம். எப்படி இருக்கிறது சகோதர நடிப்பு?

ஏதோ ஐ.நா.சபை பிரதிநிதிகள் அடிக்கடி இங்கு வருவதும் சூட்டோடு சூடாக அறிக்கை விடுவதும் சின்ன ஆறுதல்.

அந்த ஆறுதலை சற்று அதிகரிப்பதாக தேர்தல் வருகிறது.

தமிழர் போராடிய போராட்டத்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையால்–இணைந்த அரசியலின் தத்துவத்தால் அடைய முடியாதவை தேர்தல் காலத்தால் கிடைக்கின்றதென்னும் உண்மையை மறுப்பதற்கில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முகாம்களுக்கு விஜயம் செய்ததும், பயண அனுமதி விடைபெற்றுச் சென்றதும், முகாம் மக்கள் நடமாடும் உரிமையை பெற்றதும் தேர்தல் காற்று வீசுவதால் வாய்த்தவை.

தேர்தல் காற்று இவற்றோடு நிற்கப்போவதில்லை.

தமிழர்களுக்கு இந்த நாடு சொந்தம். அவர்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு என்றெல்லாம் சுற்றிச்சுழற்றி வீசும்.

தேர்தல் முடிந்து விட்டால் சுற்றிச்சுழற்றி வீசிய காற்று தமிழரின் வீட்டுக் கூரையை, வளவில் நின்ற பயன்தரும் மரங்களை ஏன் ஆட்களையே ஆட்கொண்டு விடும்.

ஆகவே வீசும் தேர்தல் காற்றில் எடுபட்டால் முள்ளிலும், பற்றைக்காட்டிலும் சிக்கிப் பரிதவிக்க வேண்டி வரும் என்பதை தமிழ் மக்கள் இம்மியும் மறந்துவிடலாகாது.

# புலிகளின் முன்னாள் போராளிகள் சித்திரவதைக்கு உட்படும் அபாயம்

## சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் சித்திரவதைக்கு உட்படுத்தப்படக்கூடிய அபாயம் நிலவுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. சிறுவர் போராளிகள் உள்ளிட்ட பெருந்தொகையான விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் தற்போது பாதுகாப்பு படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் குறைந்த பட்சம் 12 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த உறுப்பினர்கள் தனிமைப்படுத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது. விடுதலைப்புலி சந்தேக நபர்களை விசாரணை செய்யும் பொறிமுறையை வெளிப்படைத் தன்மை இல்லை என சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டி உள்ளது.

முன்னாள் போராளிகள் தொடர்பான விசாரணை நடவடிக்கையின் போது சர்வதேச சட்டதிட்டங்கள் பின்பற்றப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச–5)

# இராணுவ வீரர்களுக்கு நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் ஜனாதிபதியினால் திறந்து வைப்பு

(கொழும்பு)

இராணுவ வீரர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட சகல வசதிகளையும் கொண்ட இப்போலோகம ரணஜெயபுர கிராமம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

180 ஏக்கர் கொண்ட இந்தக் கிராமத்தில் ஆயிரத்து 509 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. வீதிகள், பஸ் தரிப்பிடம் பாடசாலை, சனசமூக நிலையம், சுப்பர் மாக்கெட் என்பவற்றை உள்ளடக்கிய முழுமையான புதிய நகரம் ஒன்றும் இந்தக் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த கிராமத்தில் 767 வீடுகள் இராணுவ வீரர்களுக்காகவும் ஏனைய 742 வீடுகள் விமானப்படை மற்றும் கடற்படை வீரர்களுக்காகவும் ஒதுக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உயிரிழந்த இராணுவ வீரர்களின் குடும்பங்கள் அங்கவீன முற்ற இராணுவ வீரர்கள் மற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே இந்த கிராமத்தில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–3)

## ஊடகவியலாளர் திஸ்ஸ நாயகத்திற்கு சர்வதேச ஊடக சுதந்திரத்திற்கான விருது

(கொழும்பு)

இலங்கையில் 20 ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் எஸ்.ஜே.திஸ்ஸநாயக்கத்திற்கு சீ.பீ.ஜே என்ற ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கான குழு சர்வதேச ஊடக சுதந்திரத்திற்கான விருதினை அறிவித்து கௌரவித்துள்ளது.

உள் நாட்டில் நமது கடமை காரணமாக அச்சுறுத்தலை எதிர் நோக்கியுள்ளவர்கள் என்ற அடிப்படையில் இந்த அமைப்பு விருது வழங்கி கௌரவிக்கும் ஊடகவியலாளர்களில் இம் முறை எஸ்.ஜே.திஸ்ஸநாயகம் விருதுக்குரியவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் மாதாந்த சஞ்சிகையொன்றில் செய்திக் கட்டுரைகளை எழுதி வந்த ஊடகவியலாளர் எஸ்.ஜே. திஸ்ஸநாயகம் பயங்கரவாத குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6)

## ஏ–9 ஊடாக மாவினை எடுத்துவர யாழ். வர்த்தகர்களுக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

ஏ–9 பாதையூடாக மாவினை எடுத்து வருவதற்கு தனியார் வர்த்தகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

தனியார் வர்த்தகர்கள் ஏ–9 பாதையூடாக மாவினை எடுத்துவர அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இதனால் வர்த்தகர்களுக்கான மா கப்பல் மூலமே எடுத்துவரப்பட்டது.

எனினும் ஏ–9 பாதையூடாக மாவினை எடுத்துவர அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் யாழ். வர்த்தர்கள் பெருமளவான மாவினை எடுத்து வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச)

# இலங்கையில் விண்வெளி முகவர் நிலையம் அமையவுள்ளது

(கொழும்பு)

இலங்கை விண்வெளி முகவர் நிலையத்தை ஸ்தாபிப்பதற்கான சட்ட மூலகங்களைத் தயாரித்து வருவதாக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை விண்வெளி முகவர் நிலையத்தை அடுத்த வருட ஆரம்பத்தில் ஸ்தாபிக்கவுள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பியந்த காரியப்பெரும தெரிவித்தார்.

செய்தித் தகவல் நிலையம் ஒன்றை ஆரம்பிப்பது, விண்வெளித்துறை தொடர்பான மனிதவளத்தை மேம்படுத்துவது மற்றும் இலங்கைக்கு ஏற்ற செய்மதி ஒன்றை நிர்மானிப்பது என்பவை இதன் நோக்கங்களாகும்.

விண்வெளிச் செயற்பாட்டுகளுக்குத் தேவையான சட்ட வரையறையை இலங்கை விண்வெளி முகவர் நிலையத்தினூடாக வகுப்பதாக பிரியந்த காரியப் பெரும குறிப்பிட்டார்.

இதற்கான ஒத்துழைப்பை இங்கிலாந்தின் சறே பல் கலைக் கழகத்திலிருந்து பெறும் வகையில் உடன்படிக்கையொன்று கைச்சாத் திடப்பட்டுள்ளது. இந்த ஒத்துழைப்பின் மூலம் மொறட்டுவை, கொழும்பு, பேராதனைப் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு விண்வெளித் தொழில்நுட்பம் தொடர்பான விளக்கம் கிடைக்கவுள்ளது.

இன்னும் 3 ஆண்டுகளுக்கு தொடர்பா டல் துறையை இலக்காகக்கொண்ட செய்மதி ஒன்றை விண்ணுக்கு ஏவத்திட்டமிட்டுள்ளதாகவும் ஆனைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். (6)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



இடையறாத பயிற்சியின் மூலம் கஷ்டங்களை நாம் வெல்ல முடியும். எளிதில் பாதிக்கப்படும் வகையில் நம்மை நாமே விட்டு வைத்தாலும் நமக்கு எதுவும் நேர்ந்து விட முடியாது என்பதை நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

நான் ஒரு சமயம் இமயமலைப்பகுதியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். நெடுஞ்சாலை ஒன்று எங்கள் முன்பு நீண்டிருந்தது. ஏழைத்துறவிகளாகிய எங்களை தூக்கிச் செல்வதற்கு ஆள் வைப்பது எங்களுக்கு இயலாத காரியம். எனவே வழி முழுவதும் நாங்கள் நடந்தே செல்ல வேண்டியிருந்தது.

# கொலம்பியாவில் எரிமலை வெடித்தது ஆயிரம் பேர் வெளியேற்றம்

(பாஸ்டோ)

அமெரிக்க கண்டத்தில் உள்ள கொலம்பியா நாட்டில் எரிமலைகள் உள்ளன. தென் கொலம்பியாவில் உள்ள (கேலராஸ்) எரிமலை நேற்று முன்தினம் திடீரென வெடித்து சிதறியது.

எனவே கரும்புகையுடன் நெருப்பு குழம்பு வெளியேறியது. இதனால் அங்கு பதட்டமும் பரபரப்பும் ஏற்பட்டது. அப்பகுதியில் சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் குடியிருக்கின்றனர்.

ஆகவே அங்கு மக்கள் உஷார்படுத்தப்பட்டனர். எரிமலை வெடிப்பதற்கு முன்பு கரும்புகை வெளியேறும்போதே 10 ஆயிரம் பேரும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இவர்கள் அனைவரும் நாரினோ நாட்டில் உள்ள பாஸ்டோ நகரில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். எரிமலை வெடிப்பதற்கு முன்பே மக்கள் வெளியேறியதால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

எரி மலை வெடித்ததால் அப் பகுதியில் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 1993 ஆம் ஆண்டு கேலராஸ் எரிமலை வெடித்ததில் 09 பேர் உயிரிழந்தனர். அத்துடன் கடந்த ஆண்டு ஹுயலா எரிமலை வெடித்ததில் 10 பேர் உயிரிழந்தனர். (6)



## சுவர் ஓட்டைக்குள் மாட்டிக்கொண்ட திருடன்

சீனாவின் டியான்லின் என்னும் நகர விவசாயி ஒருவர் தனது வீட்டின் சுவரில் ஒரு சிறிய ஓட்டையைபோட்டுவைத்திருந்தார். தனது வளர்ப்பு நாய் அதன் வழியாக புகுந்து கோழிகளை பிடித்துதின்பதற்காக இந்த ஏற்பாடுசெய்திருந்தார்.

இது தெரியாமல் நள்ளிரவு ஒரு திருடன் அந்த ஓட்டை வழியாக விவசாயியின் வீட்டுக்குள் நுழைந்தான். ஊர்ந்த நிலையில் இடுப்பு வரை உடலை மறுபக்கம் கொண்டு வந்து விட்ட அவனால் அதற்குமேல் முன்னேறமுடியவில்லை. அதுமட்டுமல்ல உடலை பின்நோக்கி நகர்த்தவும் இயலவில்லை. அதனால் நள்ளிரவு முழுவதும் அந்த ஓட்டைக் குள்ளேயே கிடந்து தவியாய் தவித்துள்ளான்.

மறுநாள் காலையில் விவசாயி பார்த்த போது தான் திருடன் ஓட்டைக்குள் சிக்கிக் கொண்டிருப்பது தெரியவந்தது. அதன் பின் தீயணைப்பு படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அந்த திருடன் மீட்கப்பட்டான். சுவரில் இருந்த ஓட்டையை சரியாகமதிப்பிடாமல் கூலமாக நுழைந்து விடலாம் என்று நினைத்து உள்ளே புகுந்து மாட்டிக் கொண்டேன் என்று கூறும் திருடன் இப்போது கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறான். (6)

# பொலிஸுக்கு உதவிய விசித்திரக்குற்றவாளி

(லண்டன்)

பொலீசாரால் தேடப்பட்டு வரும் குற்றவாளி என்ற அறிவிப்பிற்கு அதில் தொடர்புடைய குற்றவாளி தன் புகைப்படத்தை தானே முன்வந்து பத்திரிகைக்கு அனுப்பி தானே வெளியிடச் சொன்ன விந்தைச் சம்பவம் பிரிட்டனில் நடந்துள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்தவர் மார்யூ மேனார்டு (23) இவர் அங்குள்ள ஸ்வான்சி நகரத்தில் அமைந்துள்ள வீடு ஒன்றில் நடைபெற்ற திருட்டு வழக்கில் தேடப்பட்டு வரும் குற்றவாளி.

எனவே இவரைக்கண்டு பிடிக்க தெற்கு வேல்ஸ் பொலிஸார் பத்திரிகையில் விளம்பரம் ஒன்று வெளியிட்டனர்.

அந்த பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்த மாத்யூ அதில் இடம்பெற்றிருந்த தன் புகைப் படம் நன்றாக இல்லை எனக் கருதினார். இதைத்தொடர்ந்து தான் பொலிஸ் வாகனத்திற்கு முன் நிற்பது போன்ற ஒரு புகைப் படத்தை பத்திரிகைக்கு அனுப்பி அதை முதல் பக்கத்தில் வெளியிடுமாறு கேட்டுக்கொண்டார்.

இது குறித்து பொலிஸார் கூறுகையில் இதற்கு மாத்யூ விற்கு நன்றி சொல்ல வேண்டும் ஸ்வான்சி நகரத்தில் உள்ள அனைவருக்கும் தற்போது மாத்யூ எப்படி இருப்பான் என்பது தெரியும். இதனால் அவர்கள் எச்சரிக்கையுடன் இருப்பர் என்றனர். (6)

# அசாமில் மூன்று இடங்களில் குண்டுவெடிப்பு; 5 பேர் பலி

(கவுகாத்தி)

அசாமில் நேற்று காலையில் நடந்த குண்டுவெடிப்பில் 5 பேர் பலியாயினர். 25இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

அசாம் மாநிலம் நல்பாரி மாவட்டத்தில் 3 இடங்களில் குண்டு வெடித்தது. கவுகாத்தியில் இருந்து 70 கி.மீற்றர் தூரத்தில் இந்த நல்பாரி மாவட்டம் உள்ளது.

நேற்றுக் காலை 10.15 மணியளவில் இந்த குண்டு வெடிப்பு நடந்த நேரத்தில் மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். சைக்கிளில் குண்டு வைக்கப்பட்டிருந்ததாக முதற்கட்ட தகவல் தெரிவிக்கிறது. பொலிஸ் நிலையத்தின் அருகே வெடித்த சில நிமிடத்தில் 20 மீற்றர் தொலைவில் மற்றொரு குண்டு வெடித்தது.

காயமுற்றவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். சம்பவ இடத்திற்கு பொலிஸ் அதிகாரிகள் விரைந்துள்ளனர்.

தொடர்ந்து அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த குண்டுவெடிப்பை உல்பா தீவிரவாதிகள் நடத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (6)




# பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் விமானங்கள் குண்டுவீச்சு

பாலஸ்தீனத்தில் உள்ள ஹமாஸ் தீவிரவாதிகள் மீது இஸ்ரேல் இராணுவ விமானங்கள் நேற்று காலை குண்டு வீசித் தாக்கின. இதில் பாலஸ்தீனியர்கள் 7பேர் படுகாயம் அடைந்தனர். எகிப்து எல்லையில் உள்ள தொழிற்சாலைகளில் இருந்து இஸ்ரேல் வழியாக ஹமாஸ் தீவிரவாதிகள் ஆயுதங்களை கடத்தி வருகின்றனர். எனவே தீவிரவாதிகள் மீது இஸ்ரேல் இராணுவ விமானம் ரொக்கெட் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியது. இந்தத் தகவலை இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (6)

# 2050 இல் இந்தியா பொருளாதார வல்லரசாகும்

## பொருளாதார நிபுணர்கள் கணிப்பு

(புதுடில்லி)

உலகளவில் வேகமான பொருளாதார வளர்ச்சியை நோக்கி இந்தியா முன்னேறி வருகிறது. இந்தியாவுக்கு போட்டியாக சீனாவும் வேகமாக வளர்ந்து வருகிறது.

இந்த சூழ்நிலையில் 40 ஆண்டுகளுக்கு பிறகு ஏற்படும் நிலைமை குறித்து பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளனர். அதன் அடிப்படையில் 2050 ஆம் ஆண்டில் ஜீ-20 நாடுகள் என்ற தலைப்பில் கட்டுரை வெளியாகியுள்ளது.

அதன்படி 2050 ஆம் ஆண்டில் இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சி 16 மடங்கு அதிகரித்து இருக்கும். மேலும் உலகளவில் பொருளாதார வல்லரசு நாடுகளாக விளங்கும் மூன்று நாடுகளில் இந்தியாவும் இடம் பிடிக்கும்.

இந்தியா தவிர அமெரிக்காவும் சீனாவும் அந்தப்பட்டியலில் உள்ளன.

மேலும் 2032 ஆம் ஆண்டுக்குள் உலகின முதல் பொரு ளாதார வல்லரசாக சீனா உருவாகும். அதாவது அமெரிக்காவை விட 20 சதவீத வளர்ச்சியை அந்த நாடு எட்டும்.

இந்தியா, சீனா ,அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளிடம் மட்டும் ஜி -20 எனப்படும் வளர்ந்த நாடுகளின் ஒட்டு மெத்த பொருளாதாரத்தின் 70 சதவீத பங்கு இருக்கும்.

இந்த தகவல்கள் அனைத்தும் கட்டுரையில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)


# சீன நிலக்கரி சுரங்கத்தில் வெடிவிபத்து; 87 பேர் பலி

(பீஜிங்)

சீனாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள நிலக்கரி சுரங்கத்தில் பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. இதில் 87 பேர் பலியாகினர்;பலர் சுரங்கத்துக்குள் சிக்கியுள்ளனர். மீட்புப் பணி தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

சீனாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள ஹெய் லாங்ஜியாங் மாகாணத்தில் இருக்கிறது ஜிங்ஜிங் நிலக்கரிச் சுரங்கம். தனியாருக்குச் சொந்தமான இந்தச் சுரங்கத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் வெடிச்சத்தம் கேட்டது. மொத்தம் 528 பேர் நிலக்கரிச் சுரங்க ஊழியர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். இவர்களில் 419 பேர் உடனடியாக மீட்கப்பட்டனர்.

இந்த பயங்கர வெடி விபத்தில் 87 பேர் பலியானதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சுரங்க இடிபாடுகளில் பலர் சிக்கியுள்ளனர். சீன அதிபர் ஹுஜின்டோவா, பிரதமர் வென் ஜியாபோ இருவரும் உடனடியாக மீட்புப் பணிகளைத் தொடங்குமாறு உத்தரவிட்டுள்ளனர்.



மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

சுரங்க பாதுகாப்பு விதிகளை சீனா சரியாக கடைப்பிடிப்பதில்லை. அங்குள்ள சுரங்கங்கள் மிக ஆபத்தான நிலையில் இருக்கின்றன. இதனால் ஆண்டு தோறும் நூற்றுக் கணக்கான பணியாளர்கள் பரிதாபமாக உயிரிழக்கின்றனர் என்று அரசு சாரா அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளனர். அந்த வகையில் கடந்த ஆண்டுமட்டும் 3200 பேர் பலியாகி இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (6)

# உலகின் மிகப் பெரிய பிக்பாங் விஞ்ஞான ஆய்வு மீண்டும் ஆரம்பம்

உலகின் மிகப் பிரம்மாண்டமான விஞ்ஞான ஆய்வாகக் கருதப்படும் பிக்பாங் ஆய்வுப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக சேர்ன் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரபஞ்சத்தின் தோற்றம் தொடர்பில் இது வரையில் வெளிக்கொணரப்படாத இரகசியங்களை வெளிப்படுத்தும் நோக்கில் இந்த பெரு வெடிப்புச் சோதனை நடத்தப்படுகிறது.

பிக்பாங் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கடந்த வருடம் முதல் ஆய்வுப் பணிகள் ஸ்தம்பிதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஹீலியக் கசிவு காரணமாக இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டிருந்தது.

27 கிலோ மீற்றர் நீளமுடைய குழாயில் அணு மூலகங்களை உயர் அழுத்தத்தில் மோதவிடச் செய்து அதன்மூலம் பிரபஞ்ச உருவாக்கம் தொடர்பிலான பல்வேறு உண்மைகள் கண்டறியப்படவுள்ளன.

எதிர்பார்க்கப்பட்டதை விடவும் விரைவில் இயந்திரம் திருத்தப்பட்டு ஆய்வுகள் மேற் கொள்ளப்படுவதாக விஞ்ஞானிகள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர். (6)

# பண்டத்தரிப்பு சாந்தை கிராமத்துக்கு குழாய் மூலம் நீர்வழங்கும் திட்டம்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு சாந்தை கிராம மக்களுக்கு குடி நீர்வழங்கும் திட்டமொன்று சத்தியசாயி இளைஞர்களின் வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு மேற்கு மாதகல் கடற்கரைக்குச் சமீபமாக உள்ள சாந்தைக் கிராமத்தில் 412 குடும்பங்கள் தமது குடிநீர் தேவைக்காக ஒன்றரை மைல் தூரத்திலுள்ள பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிணற்றிலேயே தண்ணீர் பெற்று வந்தனர்.

இவர்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்ய வடபிராந்திய சத்தியசாயி இளைஞர்பிரிவினர் ஒரு சேவைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளின் அனுமதியுடன் அக் கிணற்றில் ஒரு தண்ணீர் தொட்டி அமைத்து அதிலிருந்து ஒன்றரை மைல் நீளத்திற்கு குலாய்கள் அமைத்து சாந்தை கிராமத்தில் அமைந்துள்ள தொட்டிகள் மூலம் நீர் விநியோகிக்கின்றனர்.

இத்திட்டம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 84ஆவது பிறந்த தினக் காணிக்கையாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப வைபவம் கடந்த 21ஆம் திகதி சனிக்கிழமை சாந்தை கிராம முன்னேற் றச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த விழாவிற்கு வடபிராந்திய சத்திசாயி அமைப்பின் தலைவரும் யாழ்.மாவட்ட நீதிபதியுமான ஸ்ரீ இ.வசந்தசேனன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இவருடன் சாயி இளைஞர் பகுதி இணைப்பாளர் இ.சரவணபவன், சாயி நிலையங்களின் உப தலைவர் டாக்டர் சிவசங்கர், பல்கலைக்கழக உதவி நிதியாளர் இ.சாயீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இடம்பெயர்ந்து வந்து சாந்தைக் கிராமத்தில் குடியேறியுள்ள சுமார் 40 குடும்பத்தைச் சேர்ந்த 250 பேருக்கு பகவான் பாபாவின் பிறந்த நாளையொட்டி மதிய போசனமும் வழங்கப்பட்டது.

(ச)

## அவதார தின விழா

சித்தன்கேணி பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் பகவான் ஸ்ரீ சத்திய சாயியின் 84ஆவது அவதார தின விழா இன்று காலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து மகாமங்கள ஆரத்தி, நாராயண சேவை, ஓம்காரம் பிரசாந்தி நிலைய கொடியேற்றம் என்பனவும் இடம் பெறும்.

மாலை பேச்சுக்கள், வில்லுப்பாட்டு, பஜனை என்பனவும் இடம்பெறும். (ச)

## சோமவார உற்சவம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணாம்பிகை சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று தொடக்கம் ஒவ்வொரு கார்த்திகை திங்களும் பிற்பகல் 3.30 மணிக்கு கும்பபூசையுடன் சோம வார உற்சவம் ஆரம்பமாகி 5 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று சுவாமி வீதியுலாவரும் நிகழ்வு இடம்பெறும். (ச-49)

# வடக்கு யுத்த நடவடிக்கைகளின் போது 650 மில்.பெறுமதியான நகைகள் மீட்பு

வடக்கு யுத்த நடவடிக்கைகளின் போது 650 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்க ஆபரணங்களை படையினர் மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.குறித்த ஆபரணங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் பேணிப் பாதுகாத்து வந்ததாக குறிப்பிடப்படுகிறது. பொதுமக்களுக்கு சொந்தமான ஆபரணங்களை புலிகள் வைத்திருந்ததாகவும் அதனை இராணுவ நடவடிக்கைகளின் போது படையினர் மீட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட சகல தங்க ஆபரணங்களும் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மீட்கப்பட்ட நகைகளுடன் உரிமையாளர்களின் பெயர் விபரங்களும் இணைக்கப்பட்டுள்ளன.618 மில்லியன் பெறுமதியான தங்க ஆபரணங்கள் மக்கள் வங்கிக்கும்,40 மில்லியன் பெறுமதியான தங்க ஆபரணங்கள் இலங்கை வங்கிக்கும் வழங்கப்பட்டுள்ளது. (ச-5)

# பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணி சம்பியன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பல்கலைக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சம்பியனானது.

ரஜரட்டை பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று மொறட்டுவ பல்கலைக்கழக அணியை எதிர்த்து விளையாடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்களைப் போட கடுமையாக முயன்ற போதும் இறுதி வரையும் அது பலனளிக்கவில்லை.இறுதியில் தண்டனை உதை வேளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றறு சம்பியனானது.

இதேவேளை போட்டியின் முதல் அரை நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி வீரர்கள் இருவர் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்ட நிலையில் 9 வீரர்களே களத்தில் நின்றதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

# ஹற்றன் நஷனல் வங்கியின் வங்கியியல் கற்கை நெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்ட யாழ்.மாவட்ட மாணவர்களுக்கான வங்கியியல் கற்கை நெறி நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஹற்றன் நஷனல் வங்கியினால் இணையத்தளத்தில் விடுக்கப்பட்ட வங்கியியல் கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பித்த மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்கை நெறியினை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கியின் கட்டிடத் தொகுதியில் நடைபெற்றது.

க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திக்கு மேல் பெற்று க.பொ.த உயர்தரத்தில் சித்தி எய்திய மாணவர்கள் இக்கற்கை நெறிக் குத் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு இக்கற்கை நெறியினைக் கற்பதற்கான நுழைவுக்கட்டணமாக 7ஆயிரத்து 500 ரூபாய் அறவிடப்பட்டது.

தொடரும் கற்கை நெறிக்காக எவ்வித கட்டணமும் இல்லை. ஹற்றன் நஷனல் வங்கியின், இவ்வங்கியியல் கற்கை நெறியானது 3 மாத காலத்தைக் கொண்டதாகும்.


இவ் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ விரிவுரையாளர் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரமும் மற்றும் விருந்தினர்களாக ஹற்றன் நஷனல் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ராஜேந்திரா தியாகராஜா, ஹற்றன் நஷனல் வங்கியின் மனித வள பிரதிப் பொது முகாமையாளர் ஜே.ஆர். பி.எம்.பாய்வா, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முகாமைத்துவப் பீடத் தலைவர் திருமதி எஸ்.சிவாஸ்கரன், ஹற்றன் நஷனல் வங்கியின் பயிற்றுவிப்பு அபிவிருத்தி சிரேஷ்ட முகாமையாளர் முனாம்ரம்புக்கல் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-5)

# கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் தரம் II 'ஆ' நேர்முகப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது


(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபையின் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் தரம் II ஆ விற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் மறு அறிவித்தல்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண உள்ளூராட்சி, நிவாரண மற்றும் புனர்வாழ்வு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில், சமூக சேவைகள், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு அமைச்சின் செயலாளர் திருமதி ர.விஜயலட்சுமி அறிவித்துள்ளதாக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.


எழுத்துப் பரீட்சை முடிபுகள் அண்மையில் வெளியாகியுள்ள நிலையில் நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 24ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும், 26ஆம் திகதி வவுனியாவிலும் நடைபெறும் என பரீட்சார்த்திகளிற்கு நேர் முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-14,5)





ஹற்றன் நஷனல் வங்கியின் சாவகச்சேரி வங்கிக் கிளை திறப்பு விழாவில் விருந்தினர்கள் அழைத்துவரப் படுவதையும், ஹற்றன் நஷனல் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ராஜேந்திரா தியாகராஜா உட்பட்டோர் மங்கல விளக்கேற்றுவதையும், தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் வைப்புச் செய்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் பயனாளி ஒருவருக்கு லீசிங் அடிப்படையில் கார் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சுரேஸ்,ரம்சன்)




பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஆசிரியர் கௌர விப்பு வீழாவிலே விருந்தினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ்.ஜெயபாலன் தலைமையில் அழைத்துச் செல்லப்படுவதையும், பிரதம விருந்தினரான செவேலி யர் (chevalier), திருமதி எஸ். இராம நாதன் ஆசிரியை ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

## கிரிபத்கொடை...

நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதும் அப்போதும் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினமும் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டமொன்றின் மீது கிராண்ட்பாஸ் பகுதியில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## முகாம் மக்களை விடுவிப்பதாக...

சட்டத்துக்குப் புறம்பாகத் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர். கொஞ்சம் கொஞ்சமாக விடு விக்கப்பட்டனர். எனினும் இன்னும் ஒரு இலட்சத்து முப் பத்தாறாயிரம் பேர் அங்கு அடைத்து வைக் கப்பட்டுள்ளனர்.

ராஜபக்ஷவின் சகோதரர் பசில் ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா மெனிக் முகாமிற்கு சென்ற சமயம் முகாம்களில் எஞ்சியுள்ள தமிழ் மக்கள் டிசம்பர் 1ஆம் திகதி முதல் சொந்த இடங்களுக்கு செல்ல முடியும் என்று அறிவித்தார். மக்களின் சுதந்திரமான நடமாட்டம் அனுமதிக்கப்படு மென்றும் தெரிவித்திருந்தார்.

எதிர்வரும் தேர்தல்களை குறிவைத்து அரசு நடத்தும் அரசியல் சித்து விளையாட்டு இது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார்.

இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு மற்றும் நலன்களுக்கான போதிய ஏற்பாடுகள் செய்யாமல் அவர்களை முகாம்களில் இருந்து வெளியேற்றப் பார்க்கிறது அரசு என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

மெனிக்பாம் முகாமை திறந்துவிடும் ராஜபக்ஷ அரசின் முடிபு தேர்தல்களை குறியாகக் கொண்டதே எனத் தெரிவித்தார். ஜனதா விமுக்திப் பெரமுன (ஜே.வி.பி)கட்சியின் தலைவர்களின் ஒருவரான விஜித கேரத் அரசின் தற்போதைய நடவடிக்கை பல மாதங் களுக்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டி ருக்க வேண்டுமென எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

## அவுஸ்.கிறிஸ்மஸ் தீவில்...

யர்களும் ஆப்கானிஸ்தானி யர்களும் மரக்கிளைகள் மற்றும் தும்புத்தடி களாலும் ஒருவருக்கொருவர் தாக்கிக் கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன இதனை அடுத்து கிறிஸ்மஸ் தீவில் பதற்ற நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதல்களின் பின்னர் 37 பேருக்கு சிகிச்சை தேவைப்படுவதாகவும் இதில் 10 பேர் தீவில் உள்ள வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவுஸ்திரேலிய தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த கலகம் நேற்று முன்தினம் இரவு பச்சை முகாம் பிரிவில் ஆரம்பித்தது. எனினும் அந்த மோதல் 30 நிமிட நேரத்திற்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டது. கலகத்தின் போது அங்கு பணியாற்றுவோரும் காயமடைந்துள்ளனர். (ச-5)

## யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கான...

மாணவர்களுக்கு வழங்குவதற்கான இலவசப் பாடநூல்கள் முழுமையாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

இதில் கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் கட்டமாக 15 லொறிகளிலும் இரண்டாவது கட்டமாக நேற்று முன்தினம் 14 லொறிகளிலும் யாழ். மாவட்டத்துக்குரிய இலவச பாடநூல்கள் முழுமையாக எடுத்து வரப்பட்டுள்ளது.

இவ்வாறு எடுத்துவரப்பட்ட பாடநூல்கள் யாழ். மாவட்டத்திலுள்ள 14 கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கும் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அடுத்த கல்வியாண்டுக்குரிய இலவச சீருடைத்துணிகளும் ஏற்கனவே யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாடசாலை மாணவர்களுக்கு 2010ஆம் கல்வியாண்டுக்கான இலவசப் பாடநூல்கள், சீருடைத்துணிகள் வழங்கும் தேசிய வைபவம் எதிர்வரும் 7ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடைபெறுகின்றது.

குறித்த தினத்தில் நாட்டிலுள்ள ஒவ்வொரு பாடசாலைகளிலும் பாடசாலை பாட நூல்கள், சீருடை வழங்கும் வைபவம் நடை பெறவேண்டிய நிகழ்ச்சி நிரல் சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே பாடசாலை அதிபர்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று நிகழ்ச்சி நிரலைப் பெற்று தேசிய ரீதியாக நடைபெறும் பாட நூல், சீருடை வழங்கும் வைபவத்தை ஒழுங்காக நடத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் என வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பாடநூல்கள், சீருடைத் துணிகள் வழங்கும் தேசிய வைபவம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறுகின்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை செய்வதற்காக கல்விவெளியீட்டுத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் லெனின் மதிவாணன், மேலதிக ஆணையாளர் ஜி.என்.சில்வா, உதவி ஆணையாளர் லால் சந்திரசிறி, வெளியீட்டு அதிகாரி ரஞ்சித் விக்கிரம சிங்க ஆகியோர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தனர்.

இக் குழுவினர் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இலவச பாடநூல்கள் முழுமையாக வழங்கப்பட்டது தொடர்பிலும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் தேசிய வைபவத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்கின்றனர்.

இக் குழுவினருக்குரிய ஒழுங்கமைப்பினை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் யாழ். இணைப்பாளர் எஸ்.நந்தகுமார் மேற்கொள்கின்றார். (ச-5)

## ஜனாதிபதித் தேர்தல் எப்போ...

கொண்ட கூட்டத்தில் உரையாற்றிய போதே இதனை அறிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மாநகர முதல்வர் சிவகீத்தா பிரபாகரன் (ஸ்ரீ.ல.சு.க), மாகாணசபை உறுப்பினர் எம்.சுபைர் (அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்) மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் வெள்ளைத்தம்பி அமிருதீன் (தேசிய காங்கிரஸ்) உட்பட அக்கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

குறிப்பாக இங்கு உரையாற்றிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன அரசியல் வேறு அபிவிருத்தி வேறு அல்ல. இரண்டும் இணைந்த செயல்பாட்டினால் தான் அபிவிருத்தியை அடைய முடியும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிவிப்பு எதிர் வரும் 24ஆம் திகதி அதிகாலை வெளி யாகும்.

எதிர்க்கட்சிக் கூட்டமைப்பில் எத்தனை கட்சிகள் அங்கம் வகித்தாலும் இதுவரை வேட்பாளர் யார்? என்று தீர்மானிக்க முடியாத நிலையே அங்கு காணப்படுகிறது. முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் அதன்பின்னர் ஏப்ரல் மாதம் பொதுத்தேர்தல் நடை பெறும் என்றார். (ச-5)

## அரசின் பக்கம்...

மக்கள் தொடர்பாக நாம் அதிக கவனம் செலுத்துவோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில உள் உறுப்பினர்கள் அண்மையில் அரசின் பக்கம் தாவியிருந்தனர். ஆனால் நான் அவ்வாறு செய்யப்போவதில்லை.

தமிழ் மக்களின் உரிமைக்காக நான் சிறு வயதிலிருந்தே போராடி வருகின்றேன் என சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசிய முன்னணி பொன்சேகாவை பொதுவேட்பாளராக அறிவிக்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சில மாற்றங்கள் ஏற்படுவதை நீங்கள் பார்க்கலாம். பொதுவான தமிழ் வேட்பாளரை நிறுத்துவது சிறந்தது என அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## 14 மில்லியன்கள் வாக்காளர்...

பெற்றுள்ளனர். ஆனால் 2005ஆம் ஆண்டு இது 133 இலட் சத்து 27ஆயிரத்து 160 ஆக இருந்தது. இது 5.4 வீத அதிகரிப்பாகும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வடக்குக் கிழக்கில் 8 இலட்சம் பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள் ளது.

2008ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் 7 இலட்சத்து 21 ஆயிரம் பேரும் மட்டக்களப்பில் 3 இலட்சத்து 30 ஆயிரம் பேரும் அம் பாறையில் 4 இலட்சத்து 20 ஆயிரம் பேரும் திருகோணமலையில் 2 இலட்சத்து 41 ஆயிரம் பேரும் புதிதாக வாக்களிக்க தகுதிப் பெற்றுள்ளனர் என்று தேர்தல் திணைக் களம் அறிவித்துள்ளது. (ச-5)

## எதிர்க்கட்சி...

செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, மங்கள சமரவீர, அவரின் நெருங்கிய நண்பர் ரிரான் அலஸ், ஜே.வி.பி. தலைவர் அனுரா குமார திஸ்ஸ நாயக்க, பிமல் ரட்ணநாயக்க ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பொது வேட்பாளரை தெரிவு செய்வது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. எனினும் அதனை ஐ.தே.க. உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை.

பொன்சேகா பதவி விலகிய பின்னர் அவருக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையில் நடைபெற்ற முதல் சந்திப்பு இதுவென்பது குறிப் பிடத்தக்கது. (ச-5)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண...

இலங்கையில் இனப்பிரச்சினையை முடிபுக்கு கொண்டுவரும் முகமாக அந்நாட்டிலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் மற்றும் அமைப்புகள் கலந்து கொண்ட இருநாள் கூட்டம் சுவிஸ் நாட்டின் ஜூரிச் நகரில் முடிபடைந்துள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் இந்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வது என்றும் அடுத்த கட்ட பேச்சுவார்த்தையில் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஒரு செயற்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட சிறிலங்கா முஸ்லிம் கவுன்சிலின் தலைவர் என்.எம்.அமீன் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்துள்ள மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் சட்டம் தொடர்பான பிரச்சினைகளும் மீள்குடியேறியுள்ள மக்களை சுயாதீனமாக மேற்பார்வை செய்கின்ற அமைப்பு ஒன்றை உருவாக்குவதின் அவசியமும் தீர்மானமாக இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டதாகவும் கூறினார்.

சில விடயங்களில் கலந்து கொண்டவர்கள் முரண்பட்டாலும் அதைத்தவிர்த்துவிட்டு ஒன்றுபட்டு செயற்படக் கூடிய விடயங்கள் தொடர்பாகத்தான் எல்லோரும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தனர்.

இந்தக் கூட்டத்தில் இலங்கையில் விரைவில் நடைபெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற ஜனாதிபதி தேர்தல் குறித்து எந்தப் பேச்சுவார்த்தையும் இடம்பெறவில்லை என்றும் அமீன் தெரிவித்தார்.

### 13ஆவது சட்டத்திருத்தத்திற்கும் மேலாக அதிகாரப் பகிர்வு

இதனிடையே இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்களுக்கு பரந்துபட்ட அளவில் அதிகாரப் பகிர்வு அளிக்க வழி செய்யும் வகையில் ஒன்றுபட்டு செயற்பட இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் இணங்கியுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் பி.பி.சி யின் சிங்கள சேவையிடம் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கும் மேலாக அதிகாரப் பகிர்வு இருக்க வேண்டுமென்ற கருத்திலும் ஒரு கருத்தொற்றுமை கூட்டத்தில் கலந்து கொண்டோரிடம் இருந்தது என்றும் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இவை தவிர நாட்டில் நிலவிவரும் மனித உரிமை மீறல்கள், மக்கள் காணாமல் போகும் சம்பவங்கள் தொடர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளவை குறித்து ஜூரிச் கூட்டத்தில் விவாதிக் கப்பட்டதாக அவர் கூறினார்.

அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோரின் கடுமையான எதிர்ப்புக் காரணமாக ஜனாதிபதித் தேர்தல் குறித்து இந்தக்கூட்டத்தில் விவாதிக்க இயலவில்லை என்றும் மனோகணேசன் பி.பி.சியின் சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். (ச-3)

## ஐக்கிய தேசி...

தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள பௌத்தர்களின் வாக்குகளை மீளப்பெற்றுக்கொள்ளும் நோக்கில் ரணில் விக்கிரமசிங்க இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் குறித்து இன்னமும் தீர்மானிக்கப்பட வில்லை என ஐக்கிய தேசியக்கட்சி செயற் குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் கிளர்ச்சிக் குழு ஜெனரல் சரத்பொன்சேகா தேர்தலில் போட்டியிடுவதனையே விரும்புவதாக உட்கட்சி வட்டாரத்தகவல்கள் சுட்டிக் காட்டுகின்றன. (ச-5)


**வேலைவாய்ப்பு**

யாழ். நகரில் உள்ள நிறுவனத்தின் விநியோகக் கணக்குகளை குடாநாட்டின் பல பகுதி பாடசாலைகளுக்கும் சென்று சரி பார்க்கக் கூடியவர் தேவை. ( பெண்கள் மட்டும்) (மோட்டார் சைக்கிள் வழங்கப்படும்)

மேலதிக விபரங்களுக்கு:
0718474325, 0772395783
(3965)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.